Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 10 (08.09.2003) திங்கட்கிழமை இதழ்: 339

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா



ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்

இணுவில் (சி-1428) T.P.-2223565

## தமிழீழ காவல்துறையின் நடுவப் பணியகத்தை


# தலைவர் பிரபாகரன் நேற்று திறந்துவைப்பு!



(கிளிநொச்சி)

தமிழீழக் காவல்துறையின் நடுவப்பணியகம் நேற்றுக் காலை தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனால் கிளிநொச்சியில் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பிரபாகரனுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 6.20 மணிக்கு தமிழீழ காவல்துறை சீர்திருத்தப் பொறுப்பாளர் நரேன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் - பொதுச் சுடரினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையும், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகமும் ஏற்றிவைத்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)



# ஊழல் மலிந்த காவல்துறைகள் மத்தியில் சர்வதேசமே உங்களைப் பாராட்டுகின்றது!

## தமிழீழக் காவல்துறைக்கு தேசியத் தலைவர் பிரபாகரன் புகழாரம்

மற்ற எத்தனையோ நாட்டு காவல்துறைகளில் ஊழல்களும் ஒழுங்கீனங்களும் நடக்கின்றன. அப்படியிருக்கும்போது சுத்தமான -தமிழீழக் காவல்துறையில் இருப்பதையிட்டு நீங்கள் நிச்சயமாகப் பெருமிதம் அடையலாமென, நேற்று நடைபெற்ற தமிழீழ காவல்துறை நடுவப் பணியகத் திறப்புவிழாவில் சிறப்புரையாற்றிய தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரை நிகழ்த்துகையில்,

எங்களுடைய காவல்துறையில் குற்றவாளிகளும் வந்து ஒழுங்காகத் திருந்திவரக் கூடிய சூழலே இருக்கின்றது. அதற்கு உங்களுடைய பொறுப்பாளர் கடமையுணர்வுடனும் இறுக்கமுடனும், கண்டிப்பாக இருப்பதுமே காரணம். அதனால்தான் நீங்கள் இன்றைக்கு உலகமே - எங்களுக்கு எதிரான பத்திரிகைகள் கூட உங்களைப் போற்றி, எழுதக்கூடிய அளவிற்கு, பாராட்டுப் பெற்றவர்களாக இருக்கிறீர்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மாவட்டத்தில்

# மீளக்குடியேறிய மக்களுக்கு படையினரால் அச்சுறுத்தல்!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் அண்மையில் மக்கள் மீளக்குடியேறிய கிராமங்களில் இராணுவத்தினர் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

வவுனியாவிலுள்ள, வேப்பங்குளம், அரசமுறிப்பு, விளாத்திக்குளம், ஓமந்தை போன்ற இடங்களிலுள்ள கிராம மக்களே இவ்வாறு இராணுவத்தினரின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மேற்படி கிராமங்களில் வாழும் மக்கள், அவர்களது இடங்களிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் போதும், வெளியிடங்களிலிருந்து உள்வரும்போதும் இராணுவக் காவலரண்களில் தமது விபரங்களைப் பதிய வேண்டும். அத்துடன் இராணுவத்தினர் சோதனை என்ற பெயரில் இரவு வேளைகளில் இந்தக் கிராமங்களிலுள்ள வீடுகளுக்குச் செல்கின்றனர். இவ்வாறு சென்ற படையினரே அண்மையில் அரசமுறிப்புப் பகுதியில் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்துள்ளனர். இதனால், அந்தக் கிராமங்களில் இரவு வேளைகளில் பெண்கள் வீடுகளில் இருப்ப

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வேப்பம்பட்டை எடுக்கச் சென்றவர் மிதிவெடியில் காலை இழந்தார்!

(யாழ்ப்பாணம்)

அரியாலையில், வேப்பமரத்தில் பட்டை எடுக்கச் சென்ற குடும்பஸ்தர் மிதிவெடியில் சிக்கிக் காலை இழந்தார்.

நேற்றுக்காலை 11 மணியளவில் அரியாலை முள்ளிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை பாஸ்கரன் (வயது 27) என்ற இளம் குடும்பஸ்தரே காலை இழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தமது வீட்டில் நோயுற்றிருந்தவர்களுக்காக வேம்பம்பட்டை எடுப்பதற்காக கவனிப்பாரற்று இருந்த காணிக்குள் சென்றவேளையே மிதிவெடி வெடித்ததில் மேற்படி நபர் காலையிழந்தார். (111,121)

## விண்ணாணம் விநாசியர்



பீரங்கிகளை வாங்குறதுக்கு மட்டும் இணங்கிப் போயினம்...!

# கொழும்பு நகரில் பொலிஸார் விசேட ரோந்து நடவடிக்கை!

வெளியிடங்களிலிருந்து கொழும்புக்கு, இரவு நேரங்களில் வரும் பயணிகளை அச்சுறுத்தி உடைமைகளை அபகரிக்கும் குழுக்களைக் கைது செய்வதற்காக விசேட ரோந்து நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பொலிஸ் மா அதிபர் -

அண்மைக்காலமாக கொழும்புக்கு வரும் பயணிகளிடம் சில கோஷ்டிகள் சோதனை நடத்தும் பாணியில் உடைமைகளைப் பறிப்பதாக தமக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்தார்.

அதேவேளை - இரவு வேளைகளிலும், அதிகாலை வேளைகளிலும் கொழும்புக்கு வரும் பயணிகளை பாதுகாப்பதற்காகப் பொலிஸார் சிவில் உடையில் கடமையில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இஸ்ரேலிடமிருந்து பீரங்கிக் கொள்வனவு; முழு ஆதரவு தெரிவிக்கிறார் தயா சந்தகிரி!

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவினால் இஸ்ரேலிடமிருந்து 30 மில்லிமீற்றர் பீரங்கிகளைக் கொள்வனவு செய்வதற்கு - தான் முழு ஆதரவினைத் தெரிவிப்பதாக கடற்படைத் தளபதி தயா சந்தகிரி தெரிவித்தார்.

இஸ்ரேலிடமிருந்து ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட 23 மில்லிமீற்றர் ரகப் பீரங்கிகளே கடற்படையின் பாவனையில் உள்ளன. தற்போது அமெரிக்காவிடமிருந்து 30 மில்லிமீற்றர் ரகப் பீரங்கிகளை கொள்வனவு செய்தால், அவற்றை கடற்படைப் படகுகளில் பொருத்த முடியாமல் இருக்கும்.

ஏனெனில், இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்த பீரங்கிகளுக்கும், அமெரிக்கத் தயாரிப்புப் பீரங்கிகளுக்கும் இடையே - பீரங்கிகளைப் பொருத்தும் தளம் வித்தியாசமாக இருக்கும். அவ்வாறு அமெரிக்கப் பீரங்கிகளை கொள்வனவு செய்தால், படகின் வழமையான இடத்தில் பொருத்தமுடியாது. உள்ளேயே பொருத்தவேண்டும்.

அத்துடன், அமெரிக்கப் பீரங்கி இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ள பீரங்கிகளைவிடப் பாரம் கூடியது. இதனால், கடற்படை படகுகளின் வேகம் 10 கடல்மைல்களாகக் குறையும்.

இஸ்ரேலிடமிருந்து இந்த ரகப் பீரங்கிகளைக் கொள்வனவு செய்வதால், அவை பாரங்குறைந்தவையாகவும், இஸ்ரேலிய நிபுணர்களே வந்து சரியான முறையில் - அதாவது 23 மில்லிமீற்றர் பீரங்கிகள் உள்ள இடத்தில் - பொருத்தி விடுவார்கள் என்பதனாலாகுமென, அவர் மேலும் தெரிவித்தார்.

EXPOAIR

your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297

0712348888 0712349999 074512666 01360290 01360291

email . jaffna @ expoavi . com. (சி -1139)

எக்ஸ்போஎயார்

வான் வெளியில் உங்கள் தோழன்...

# யாழ்., கிழக்கு பல்கலைக்கழகங்களை புனரமைக்க மாணவர் குழு அமைப்பு!

யாழ்.பல்கலைக்கழகத்தையும், கிழக்குப் பல்கலைக்கழகத்தையும் நவீன வசதிகளுடன் தரமுயர்த்துவ தற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள் ளது.

அண்மையில் கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தின் - திருகோண மலை வளாகத்தில் நடந்த சந்திப் பில், யாழ். பல்கலைக்கழக மாண வர்கள் ஒன்றியம், திருமலை வளாக மாணவர் ஒன்றியம் ஆகியன இணைந்தே, இந்தக் குழுவினை அமைத்துள்ளன.

இதில் யாழ்.பல்கலைக்கழகத் தின் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாகவும், கிழக்கிலங்கை பல் கலைக்கழகங்களின் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாகவும், திட்டங்களைத் தயாரித்து - அரசிற்கு இது சம்பந்தமாக தெரியப்படுத்தி, இவற்றினை உடனடியாக நடை முறைப்படுத்த வேண்டுமென வலி யுறுத்துவதெனவும்,. தீர்மானிக்கப் பட்டுள்ளது.

## மூன்று பத்திரிகையாளர் இந்தியாவுக்கு கல்விச் சுற்றுலா

மூன்று இளம் ஊடகவியலாளர் கள் இந்தியாவுக்குக் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஞாயிறு திவயின பத்திரிகையா ள் ஜெகந்தகுமார கனககார ஆரச்சி, வீரகேசரி பத்திரிகையாளர் சந்திர லிங்கம் ஸ்ரீகஜன், லக்பிம பத்திரி கையாளர் கஜன் குமார வீரசிங்க ஆகியோரே கல்விச் சுற்றுலாவுக்கு செல்லவுள்ளனர்.

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் பேரவை, இந்தக் கல்விச் சுற்றுலா வுக்கான ஒழுங்கைச் செய்துள்ளது. கல்விச் சுற்றுலாவின்போது, இந்தியா வின் பிரபல பத்திரிகை நிறுவனமான "மலையாள மனோரமா" பத்திரிகை நிறுவனத்திற்கு இவர்கள் செல்ல வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மூவரும், பத்திரிகை யாளர் பேரவையின் - இளம் பத்தி ரிகையாளர்களிற்கான விருதினை அண்மையில் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சமுர்த்தி வங்கி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் சமுர்த்தி வங்கி திறப்பு விழா, எதிர்வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை வீதி, பூதர்மடம் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

## வன்னியில் உபதபால் நிலையங்கள் கொட்டில்களில் இயங்கி வருகின்றன

வன்னியிலுள்ள பல உபதபால் நிலையங்கள் இன்னமும் கொட்டில் களிலேயே இயங்கிவருகின்றன.

மேற்படி சில உபதபால் நிலை யங்கள், நிரந்தர கட்டடமின்றி இயங் கும் துன்பகரமான நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. கிளிநொச்சி பிர தான தபால் நிலையமும் இது போன்று. கடந்த கால யுத்தத்தின்பின் மீளப் புனரமைக்கப்படாத நிலையி லேயே காட்சியளிக்கிறது.

இதேவேளை பல கோடிக்கணக் கான ரூபாய் செலவில், பாரிய தபால கக் கட்டடங்கள் ஏனைய பிரதேசங்களில அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், வன் னிப் பகுதியை ஊடகத்துறை அமைச் சர் கண்டுகொள்ளாதது கவலை தருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## திருமலைதுறைமுகத்துக்கு 52 அகதிகள் இன்றுவருவர்

(கொழும்பு)

தமிழக அகதி முகாம்களில் தங் கியிருந்த தமிழ் அகதிகள் 52 பேர், இன்று திருகோணமலைக்கு வரவுள் ளனர்.

கடந்த கால யுத்த நடவடிக்கை களின்போது, திருகோணமலை- சல்லி, சம்பூர் திருக்கோவிலூர் ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர் களே, தமது சொந்த இடங்களுக்கு திரும்பவுள்ளனர்.

நாகபட்டிணம் இறங்குதுறை யிலிருந்து, இவர்கள் பாதுகாப்பாக அழைத்துவரப்பட்டு கடற்படையிடம் ஒப்படைக்கபடவுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

நிரஞ்சனாஸ் சங்கானை
விஜய், பிரியங்கா சோப்ரா நடித்த
தமிழன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
WISH MASTER
(கராட்டிப் படம்)
(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.
மாதவன், சிம்ரன், சினேகா நடித்த
பார்த்தாலே பரவசம்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1424)

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும் சிறுகதை; கவிதைப் போட்டிகள்

சிறுகதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

கவிதை - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

நிபந்தனைகள்

- ✧ எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற்கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
- ✧ மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- ✧ கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால் எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
- ✧ கதைகள், கவிதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
- ✧ ஆக்கங்கள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
- ✧ நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
- ✧ பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

ஓவ் (f) செற் முறையில் அச்சுப் பதித்து இப்போது உங்கள் தேவையை, தங்கள் சேவையாக கருதி ~ தரமாக, நேர்த்தியாக என்றும் தெளிவாகப் பார்க்க, பாதுகாக்க அச்சுப் பதித்துத் தருகிறார்கள்

சுரபி பதிப்பகத்தினர்

பத்திரிகைகள்
மலர்கள்
சஞ்சிகைகள்
பெரிய அளவிலான போஸ்ரர்கள்
துண்டுப் பிரசுரங்கள்
வைபவ அழைப்பிதழ்கள்
சமய சந்நிதான விழாக்கால போஸ்ரர்கள்

உங்கள் தேவை எதுவானாலும் நிறைவுடன் பெற்றுக்கொள்ள ஒருமுறை சுரபியை நாடுங்கள்.

குறைந்த கட்டணம் குறுகிய தவணை

உங்கள் ஆக்கங்கள் உங்கள் வெளியீடுகள்
உங்கள் எண்ணக்கிடக்கைகள்
உங்கள் கற்பனை வளங்கள்


இவற்றிற்கு செயல் வடிவம்தான் சுரபியின் நேர்த்தியான கணினி தட்டெழுத்து அமைப்பும், தெளிவான அச்சுப்பதிப்பும்.

உங்கள் தெரிவு என்றும் ஒரே தெரிவாக இருக்கட்டும்.
அதுவே சுரபியாக இருக்கட்டும்.

சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2223922 2225107

# சுதந்திரக் கட்சி நிலைப்பாட்டினை மாற்றினால் தேசிய கூட்டணி அமைப்பதற்கு ஜே.வி.பி.தயார்!

## விமல் வீரவன்ச மீண்டும் வலியுறுத்து



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தமது நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தினால், தேசிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்குத் தயார் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே - ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவனச இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக, இருதரப்பிற்கும் இடையேயான பேச்சுவார்த்தை முறிவடைந்தமைக்கு, இரு பிரதான காரணங்கள் இருந்தன. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரப் பரவலாக்கல் சிறந்தது என்ற நிலைப்பாட்டைச் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கொண்டுள்ளது.

அத்துடன், நோர்வே மத்தியஸ்தத்தை - ஜே.வி.பி. நிராகரித்தபோதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதுபற்றிய தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, இவ்விரு காரணங்கள் தொடர்பாக, ஜே.வி.பி. கொண்டுள்ள நிலைப்பாட்டில் ஒரு போதும் மாற்றம் ஏற்படப்போவதில்லை எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு பாசிக்குடாப் பகுதியில் பொலிஸாரால் புதியமுகாம் அமைப்பு

மட்டக்களப்பு பாசிக்குடாவில் - இலங்கைப் பொலிஸார் புதிய முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

இது போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் என, பிரதேச மக்களால் - வாழைச்சேனைப் பிரதேச செயலரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாரின் இந்த முகாம் அமைபபு முயற்சியானது, பொதுமக்களுக்கு மட்டுமல்ல, பாசிக்குடாவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் இடையூறாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாசிக்குடாக் கடலில் குளிக்க வரும இப்பிரதேசப் பெண்களும், இதனால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

ஏற்கனவே பாசிக்குடாவிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கல்குடாவில், பொலிஸ் காவல் நிலையமொன்று அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதற்கு மேலதிகமாகவே தற்போது பாசிகுடாவில் புதிய முகாம் அமைக்கப்பட்டுவருவதாக, மக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

# இடைக்கால நிர்வாகசபையை தடுப்பதற்கு ஜனாதிபதியின் நடவடிக்கை போதாதாம்!

## குற்றம் சாட்டுகிறது சிஹல உறுமய

வடக்கு- கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகசபை வழங்குவதைத் தடுப்பதற்கு, ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கை போதாது என, சிஹல உறுமயக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜனாதிபதி துரித நடவடிக்கை எடுப்பாரானால், அதற்கு முழுமையான ஆதரவு வழங்கவுள்ளதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ன கருத்துத் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் - பாரிஸில் தயாரித்த இடைக்கால நிர்வாகசபை தொடர்பான நகல் சட்டமூலத்தை, விரைவில் அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்ததும், அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்தவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகளை நோர்வே அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. ஆனால், ஜனாதிபதி அதனைத் தடுப்பதற்குத் தனது நிறைவேற்று அதிகாரத்தை உரியமுறையில் பயன்படுத்தவில்லை.

பிரதான எதிர்க்கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணி - இடைக்கால நிர்வாகசபைக்கு எதிராகப் பேசி வருகிறதே தவிர, அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாக இல்லை.

ஆகவேதான், ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு சிஹல உறுமய ஆதரவு வழங்கும். ஜே.வி.பியின் எதிர்ப்பு நடவடிக்கைகள் பயன்தராது எனவும் அவர் கூறினார்.

### சுதந்திரக்கட்சி அமைப்பாளர் நியமனம்

(கொழும்பு)

கொழும்பு கிழக்கு பகுதிக்கான சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக - ரத்தின கமகே என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் பணிப்பின் பேரிலேயே, இவர் இந்தப் பதவியில் நியமிககப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் முன்னர் சிறு தேயிலைத் தோட்ட அதிகாரசபையின் தலைவராகக் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாகாணசபைத் தேர்தலில்

# ஐ.தே.க வுடன் இணைந்து போட்டியிடுவதா? முஸ்லிம் காங்கிரஸ் இன்று தீர்மானிக்கும்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரைவில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களில், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதா அல்லது தனித்து அந்த கட்சியின் மரச்சின்னத்தில் போட்டியிடுவதா என்ற இறுதிமுடிவை இன்று எடுக்கவுள்ளது.

இது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கின்ற சந்திப்பொன்று, இன்றைய தினம் அலரிமாளிகையில் நடைபெறும்.

கடந்த புதனன்று பிரதமருடன் இது தொடர்பாக நடைபெற்ற சந்திப்பின்போது, ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிடுமாறு பிரதமர் அழைப்பு விடுத்திருந்தார். எனினும், இந்த விடயம் தொடர்பாகப் புத்தளம், களுத்துறை, கண்டி, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் சிக்கல்கள் நிலவுவதால், இந்தச் சிக்கல்களுக்கு உறுதியான தீர்வொன்றைக் காணவேண்டிய பொறுப்பு - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப்பீடத்திற்கு இருந்து வருகிறது.

அதனால், இந்த மாவட்டங்களில் ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிடும்போது, அவ்வப்போது ஐ.தே. கட்சி உறுப்பினர்களுக்கும், முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படாமலிருப்பதைத் தடுப்பது குறித்து ஒரு உடன்பாடு காணப்பட்ட பின்னரே, ஐ.கே.கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக, இறுதிமுடிவு எடுக்கப்படும் என்று கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# வசதி குறைந்த மாணவர்களுக்கு மாதாந்த புலமைப்பரிசுத் திட்டம்!

## கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

வசதி குறைந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக மாதாந்தம் புலமைப்பரிசில் களை வழங்க, கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சமுர்த்தித் திட்டத்தின் ஊடாகச் செயற்படுத்தப்படும் இந்த திட்டத்துக்கு - 2 கோடி 52 லட்சம் ரூபாவை வழங்க அரசாங்கம் நிதி ஒதுக்கியுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 3000 மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக வழங்க ஒரு கோடியே 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக, அரசாங்க ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட புலமைப் பரிசில் தொகையான - 250 ரூபாவை, 350 ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து எம்.பிக்களும் ஒன்றிணைய வேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் பௌசி

(கொழும்பு)

கிழக்கில் வாழும் சகல முஸ்லிம் மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த, அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எதிர்வரும் 11 ஆம் திகதி விசேட கூட்டம் ஒன்றைத் தாம் நடத்தவுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டத்தில் சகல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என, தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலான சம்பவங்கள் இடம்பெற்று வருகிறது. இவர்களது பாதுகாப்பை உறுதிசெய்ய, அரசு சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் எனவும், பௌசி கேட்டுக்கொண்டார்.

# பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க தனியார் துறையுடன் இணைந்து திட்டம்!

## பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவிவரும் வேலையில்லாப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு - அரசு புதிய திட்டங்களை வகுக்கவுள்ளது. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி, மாத்தளையில் நடைபெற்ற - யுக தக்ம கைத்தொழிற்துறைக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்து, உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் - தற்போது நாட்டிலே வேலையில்லாப் பிரச்சினை வெகுவாக அதிகரித்துள்ளது. வேலையில்லாப் பட்டதாரிகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்த வண்ணம் உள்ளது. இவற்றால் ஏற்படும் வேலையில்லாப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, அரசு - தனியார்துறையின் பங்களிப்புடன் பல திட்டங்களை வகுக்கவுள்ளது.

இதன் மூலமாக, தனியார் தொழிற்துறையிலே பல புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும். இதற்காக, தொழில் முயற்சிகளிற்கான வங்கிகள்மூலம் வழங்கப்படும் கடன்களுக்கான வட்டிகள் குறைக்கப்படவுள்ளன.

அடுத்துவரும் இரண்டு தசாப்த காலப் பகுதிக்குள், இரண்டு மில்லியன் வேலை வாய்ப்புக்கள் - புதிதாக உருவாக்கப்படவேண்டும். இதன் மூலம், எதிர்காலத்தில் ஏற்படப்போகும் வேலையில்லாப் பிரச்சினையை, வெகுவாகக் குறைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, அடுத்துவரும் வரவு-செலவுத் திட்டத்தில் - அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வுகள் ஏற்படுத்தப்படுமெனவும் பிரதமர் உறுதியளித்தார்.

# ஜே.வி.பியோடு அன்று இணைந்திருந்தால் 16 மாவட்டங்களில் வெற்றிபெற்றிருப்போம்

## அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில் ஜே.வி.பியோடு இணைந்திருந்தால், 16 மாவட்டங்களில் வெற்றி பெற்றிருப்போம் என்று, பொது ஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் - அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்திலேயே - ஐக்கிய தேசிய முன்னணியைப் பதவியிலிருந்து இறக்க வேண்டும். இந்த அரசாங்கம்- கடந்த 19 மாதங்களுக்குள், மக்களின் செல்வாக்கை இழந்துவிட்டது என்றும் குறிப்பிட்டார்.

நாட்டை இரண்டாகப் பிரிக்கும் முயற்சியிலேயே பிரதமர் செயற்படுகிறார். ஜனாதிபதி இருக்கும்வரை, இந்த முயற்சி பலனலிக்காது என்றும் கூறியுள்ளார்.

இந்த அரசாங்கத்தை - வீட்டுக்கு அனுப்பிவைக்க, ஜனாதிபதியினால் முடியும். இது அரசியலமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி- நாடாளுமன்றத்தைக் கலைத்தால், அந்தப் பிரகடனத்தை - அரச அச்சகத்தில் அச்சிட முடியாமல் தடுக்கமுடியும் என அமைச்சர்கள் கூறிவருகிறார்கள். இப்படியான சம்பவம் நிகழ்ந்தால், ஒரு லட்சம் ஆதரவாளர்கள் - அரசு அச்சகத்தினை முற்றுகை இடுவார்கள் என்றும் கூறினார்.

தற்போது, சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் முறிவடைந்திருந்தாலும் -

எதிர்வரும் தேர்தல்களில் இரண்டு கட்சிகளும் ஒன்றாகப் போட்டியிடும் என்று, அனுரா பண்டாரநாயக்க கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது

# நாடாளுமன்ற தெரிவுக்குழு 3 நாள் கூட்டத்தை நடத்தும்

சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவை அமைப்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு - தினேஷ் குணவர்த்தன தலைமையிலான மூன்று கூட்டங்களை நடத்தவுள்ளது.

பவ்ரல் அமைப்பு - நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம், ஆணைக்குழு அமைப்பது தொடர்பான வரைபு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

இதேவேளை - ஆணைக்குழு அமைப்பது சம்பந்தமாக, பொதுமக்களின் அபிப்பிராயங்களை அறிந்து கொள்வதற்காகவே, இந்த மூன்று நாள் கூட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மூன்று கூட்டங்களும் 18, 20,26 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

இதன் இறுதி அறிக்கை ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்படும் என, இதன் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

# வட - கிழக்கில் போலியோவை ஒழிக்க தடுப்பு மருந்து வழங்குவதற்கு ஏற்பாடு

இலங்கையிலிருந்து இளம்பிள்ளைவாத நோயை ஒழிப்பதற்குரிய இறுதி நடவடிக்கையாக, எதிர்வரும் 20 ஆம் திகதியும், அடுத்தமாதம் 18 ஆம் திகதியும் வட - கிழக்கு மாகாணத்திலுள்ள பத்து வயதுக்கு உட்பட்ட அனைத்து சிறார்களுக்கும், தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது.

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் இப்போது போலியோ நோய் பரவி வருவதாகவும், இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்திருந்த தமிழர்கள் நாடு திரும்பிக்கொண்டிருப்பதனால், இலங்கையிலும் அந்த நோய் பரவலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதையடுத்தே, பத்து வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் - நோய்த்தடுப்பு மருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உபதேசிய போலியோ நோய்த் தடுப்பு தினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள இந்த தினங்களில் - வட மாகாணத்தில் உள்ள குழந்தைகளுக்கு எவ்வாறு தடுப்பு மருந்து வழங்கப்படவேண்டும் என்பது குறித்து, வவுனியாவில் இரண்டு நாட்கள் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

வடக்கு தொற்றுநோயியல் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த திருமதி மல்லவராச்சி, திருமதி மனோகரி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய வடமாகாண மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் கலந்துகொண்டு தத்தமது மாவட்டத்திற்குரிய வேலைத்திட்டங்களை முன்வைத்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள பத்து வயதுக்கு உட்பட்ட 30 ஆயிரம் குழந்தைகளுக்கு- 150 நிலையங்களில் போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது.

இதற்கென - 500 சுகாதாரத் தொண்டர்களை, சுகாதாரத்துறை ஊழியர்களுடன் பணியில் அமர்த்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்விரு தினங்களிலும்- காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரையில் தடுப்பு மருந்து வழங்கப்படும் என்றும், மருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும் 10 வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் மீண்டும் இந்தத் தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொடுக்குமாறு பெற்றோர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## தமிழ் மக்களின் படுகொலைகள் தமிழர் பலத்தை பெருக்கியுள்ளது

### கௌசல்யன் தெரிவிப்பு



விடுதலைப் போராட்டம்- ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தபோது, அதனை முளையில் கிள்ளிவிடுவதற்காக, தமிழர் தாயகப்பகுதிகளில் படுகொலைகள் கட்டவிழ்த்துவிடப் பட்டன. ஆனால், தமிழ்மக்கள் படுகொலைகளைக் கண்டு அஞ்சி ஒடுங்காது, தமிழர் பலத்தைப் பல வழிகளிலும் பெருக்கியதால், இன்று தமிழ்மக்கள் தலைநிமிர்ந்து வாழும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. தமிழர் ஆயுதரீதியில் சமபலத்துடன் களத்தில் இருப்பதாலேயே, படுகொலைகளற்ற சூழலில், தமிழர்கள் வாழும் நிலை இன்று ஏற்பட்டிருப்பதாக மட்டு - அம்பாறை பிராந்திய அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை - மட்டக்களப்பு மாவட்ட தமிழர் பெருமன்றம் ஏற்பாடு செய்த தமிழீழ மக்கள் படுகொலை நினைவுநாளில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், காலை 6.30 மணிக்கு மட்டக்களப்பு மாவட்ட வழிபாட்டுத்தலங்களில் மணியோசை எழுப்பப்பட்டு, அங்கு வழிபாடுகளும் இடம்பெற்றன.


சாலைகளின் முக்கிய சந்திகளில பதாதைகளும், வளைவுகளும் கட்டப்பட்டிருந்ததுடன், மக்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து, தமது கடமைகளை மேற்கொண்டார்கள். பாடசாலைகளில்- கொல்லப்பட்ட மக்களை நினைவுகூரும் கூட்டங்கள் இடம்பெற்றன.

## புலோலியில் வாள் வெட்டில் வயோதிபர் காயம்

தலையில் ஆழமான வெட்டுக் காயத்துடன் - வயோதிபர் ஒருவர், நேற்றுமுன்தினம் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில், புலோலி வல்லிபுரக்குறிச்சியைச் சேர்ந்த - எஸ்.ஸ்டாலின் (வயது 62) எனும் வயோதிபரே வெட்டுக்காயத்துக்குள்ளானவராவார். மேற்படி வயோதிபரின் ஆடும், கோழியும் அயல் வீட்டினுள் சென்றதால் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே, இறுதியில் வாள்வெட்டில் முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (17)



தொண்டமனாறு - சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால், வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்குக் கண்ணாடி வழங்கும் வைபவத்தில் - கண்ணாடியொன்றை - இளைப்பாறிய ஆசிரியர் வீரகுலசிங்கம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (17)

## மானிப்பாய் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா

மானிப்பாய் பட்டினசபை முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த விளையாட்டுவிழா - நாளை பிரதேச சபை தலைமைச் செயலக மைதானத்தில்- பிரதேச செயலர் பி.விக்டர் தலைமையில், 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக- உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக - வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச அரசியற் பொறுப்பாளர் சு.பா.பவநீதன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் அருணாசலம் மற்றும் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### போயாதின நிகழ்வு

(வண்ணை)

யாழ். பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் - புதன்கிழமை காலை 5 மணிமுதல், போயா தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. நகர சங்கீர்த்தனம், கொடியேற்றம், பஜனை என்பன இடம்பெற்று, நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறும். விசேட நிகழ்வாக - இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள ஹரி ஓம் அம்மாவின் விசேட சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (111)

### ஓவிய அறநெறி நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பிரதிமைக் கலைமாமணி கலாபூஷணம் இராசரத்தினம் - ஓவிய அறநெறி என்ற நூலை ஆக்கியுள்ளார். இந்த நூலானது, பாறைக் கலையிலிருந்து பல்கலைக்கழகம் வரையும், பல பயனுள்ள விடயங்களை உள்ளடக்கியுள்ளதுடன், விளக்கப்படங்களும் இணைக்கப்பட்டுள்ளன. பிரதிமைக் கலையின் பூர்வீகம், அது கடந்துவந்த பாதை, எதிர்நோக்கிய சவால்கள் என, ஓவிய உலகத்தினருக்கு- இவரது இரண்டாவது படைப்பான இந்த நூல் - பல வழிகளிலும் துணைபுரிவனவாக இந்த வெளியீடு அமைகின்றது.

### 'உ' அட்டை வைத்திருப்போரை கிராம அலுவலர் அழைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கோயில் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவிலுள்ள 'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போர் - தமது பங்கீட்டு அட்டையும், 3 புகைப்படப் பிரதிகளையும் இன்று காலை 10 மணிக்கு கிராம அலுவலர் பணிமனைக்கு கொண்டுவருமாறு கிராம அலுவலர் க.செல்வராசா அறிவித்துள்ளார். (34)

## சரசாலை மத்தி சனசமூகநிலைய திருத்த வேலைகளுக்கு நிதியுதவி

(தென்மராட்சி)

சரசாலை மத்தி சனசமூக நிலையத் திருத்த வேலைகளுக்கு என, பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து, 1 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக, சனசமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

தாம் கடந்த வருடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே, இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, சரசாலை மத்தி அம்பாள் முன்பள்ளிக்கும், சரசாலை வடக்கு முன்பள்ளிக்கும், கச்சாய் வினோபாஜி முன்பள்ளிக்கும் - தலா 1 இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : ஸ்ரீ.பிரதீப்
முகவரி : அரசடி அம்மன் றோட், திருநெல்வேலி.

முதலாவது அகவையில்

பெயர் : பா.நிருஷனா
முகவரி : இத்தாவில், பளை.



நான்காவது அகவையில்



பெயர் : இ.ரதீபன்
முகவரி : 2 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

எட்டாவது அகவையில்

பெயர் : வி.குகாணன்
முகவரி : 36, பாரதி லேன், யாழ்ப்பாணம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------
பெற்றோர் ஒப்பம்

# எனது ஊரிலும் தான்

நாவல்

**சி. கதிர்காமநாதன்**

செட்டியாரைச் சந்தித்து விடயத்தைச் சொன்னேன். அவரும் பெரிதாக யோசனை செய்தார்.

"சிலோன் காரருக்கு, இப்ப வீடு தரமாட்டாங்க. இருந்தாலும் முயற்சி பண்றேன்". அவ்வளவுதான்.

மறுபடியும் - வீட்டு உரிமையாளர் ஞாபகப்படுத்திவிட்டுப் போனார். சிதம்பரத்தின் அப்பாவிடம் கதைத்திருந்தேன். அவருடன் மாம்பலத்தில் வீடு பார்க்கச் சென்றேன். புறோக்கரும் உடன் வந்தார். பல வீடுகளைப் பார்த்தோம். கையை விரித்து விட்டார்கள்.

"சிலோன்காரருக்கு வீடு கொடுத்தா, நாங்களும் பொலிஸ் ஸ்ரேசன் போகவேண்டியது தான்". பேச்சைத் தொடராமல் உடன் அனுப்பி வைத்தார்கள். எனக்கு என்னவோ போலாகிவிட்டது. திரும்பவும் வீட்டு உரிமையாளர் வந்தால், இன்னும் கொஞ்சம் தவணை கேட்கும்படி - சிதம்பரத்தின் அப்பா சொன்னார்.

நான் கேட்டபோது,

"நாங்கள் நண்பர்களாகவே பழகுவோமே" என்று சொல்லிவிட்டார்.

செட்டியாரை மறுபடிச் சந்தித்தேன். பலனில்லை. இப்படிச் செய்யலாமா?

பிரச்சினைக்குச் சுலபமான வழி. யோசிக்க வேண்டியதில்லை. யாரையும் கெஞ்சவேண்டியதில்லை. விமான ரிக்கற் புக்பண்ணிவிட்டு, இங்கிருந்து கிளம்பி விடலாம். யாருக்குத்தெரியப் போகிறது. இரண்டு மூன்று நாட்கள் பார்ப்பார்கள். எங்கேயாவது வெளியூர் போயிருப்பதாக நினைப்பார்கள். நாட்கள் நகர உண்மை தெரியவரும்.

இப்படியே செய்துவிடலாம். பிறகு என்னசொல்வார்கள்?

"அப்பவே நாங்கள் சொன்னோம். சிலோன்காரங்களை நம்பக்கூடாது. கடைசியில இப்படிப் பண்ணிட்டு போய்விட்டான்"

வேண்டாம் - இந்தப்பேர் வரக்கூடாது. மொத்தமாக எல்லோர் மேலும் பழிபோட்டு விடுவார்கள். என்னால் இந்த அவப்பெயர் வரக்கூடாது. என்ன கஷ்டம் வந்தாலும், இந்த தவறைச் செய்யக்கூடாது. பின் என்னதான் செய்வது?

பின்னேரம் சிதம்பரத்தின் அப்பா என்னைத் தனியாக அழைத்துச் சென்றார்.

"முரளி, அசோக்நகர்ல எங்களுக்குத் தெரிஞ்ச பிளாட்ல ரூம் இருக்கு. கொஞ்சம் புறம்போக்கான ஏரியா. நமக்கு தெரிஞ்சவங்க. உமக்கும் நல்லது. அங்கேபோய் இருந்து கொண்டு ஊருக்குப் போற அலுவலப்பாரும். தனியா இருக்கக் கூடாது."

எனது வீட்டுக்காரர் என்னைக் காலி பண்ணச் சொன்னது, எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. இது பற்றி யாரும் என்னுடன் கதைக்கவில்லை.

கடவுளே! அசோக்நகரில் இடம் கிடைத்தால்....

அசோக்நகரில் வீடு எடுத்து, இரண்டு நாளாகி விட்டது. இரவு நேரம் இரண்டு மணிக்கு மேல் இருக்கும் மின்சாரம் இல்லை. இதனால், பல்கனிக் கதவைத் திறந்தபடி படுத்திருந்தேன். புது இடம் நித்திரை வரவில்லை. திடீரென கதவு தட்டப்பட்டது. சட்டென்று எழுந்தேன். இந்த நேரத்தில் என்னைத் தேடி யார் வந்திருப்பார்கள்?

வெங்கிட்டுத்தான் வீடு மாறும் போது கூட நின்று உதவியவன். உதயம் தியேட்டரிலே படம் பார்த்துவிட்டு வந்திருப்பானோ?

மறுபடியும் கதவு தட்டாமல், இடிக்கப்பட்டது.

இதற்கு மேலும் பொறுக்காமல் வெளியே வந்து பார்த்தபோது, நான் அவர்களுக்கு வேண்டப்பட்டவனாக இருந்தேன். உடல் விறைத்தது.

ஏன் இப்படி வந்திருக்கிறார்கள்? மூன்று பெரிய வாகனங்கள் வரிசையாக நிற்க, பலர் ஆயுதங்களை நீட்டியபடி நின்ற கோலம் - என் ஒருவனுக்கு இத்தனை பேரா?

நான் கதவைத் திறந்ததும், என்னைத்தள்ளிக்கொண்டு உள்ளே வந்த வேகம்!

இருவர் என் கைகளை இறுக்கப்பிடித்தபோது, ஒருவன் என் கழுத்தைப் பிடித்து, அதிலிருந்து கறுப்புக் கயிறை என்னமாதிரி உருவி அறுத்துவிட்டான்!

"சார் ஒண்ணையும்காணோம். வெறும் கயிறுதான்"

"நல்லாப் பாருங்க. அதிலதான் பூட்டியிருப்பாங்க"

அந்த நேரத்தில் என்னைச் சுற்றி எத்தனை பேர்.

நித்திரைக் கலக்கத்தில் ஒன்றும் தெரியவில்லை.

யார்சொல்லி வந்திருப்பார்கள். அதுவும் இந்த இரண்டு நாட்களுள் விசாரணை, விசாரணை.

மாம்பலத்தில் பதிஞ்சால்போதுமா? இங்க வந்து, நம்ப ஸ்ரேசனில பதிய வேணாம்?

"வந்து இரண்டு நாள்தான்..."

"இந்தக் கதையெல்லாம் வேணாம்"

இந்தவேளை, வீட்டிற்கிடந்த பொருட்களை ஏனையோர் சிந்திச்சிதறி அலசினார்கள்.

எதைத் தேடுகிறார்கள்?

"சார் இதைப் பாருங்க"

அந்த வெள்ளைத் தாளில் இருந்ததை அவர் வாசித்தார்.

"என்ன, எங்க ஊர்ப் பெரியவங்க பேரெல்லாம் எழுதி வைச்சிருக்கு?"

இவர்களுக்கு எப்படி விளங்கவைப்பது? குறுக்கெழுத்துப் போட்டிக்குத் தயார் செய்த பெயர்கள் அவை. அது இப்படியா சிக்கலில் மாட்டிவிடும்? மறுபடி குடைந்தார்கள். முடிவிலே என் வாசற் கதவைப் பூட்டச்செய்து, கீழே இறக்கிக் கொண்டு போனார்கள். அவர்களின் மத்தியிலே நான் தளர்ந்தபடி நடந்தேன். என்மனக்கண்ணிலே எத்தனையோ ஆபத்துக்கள் இருந்தாலும், பாதுகாப்பு நிறைந்த, இப்போது ஓரளவு சுதந்திரம்மிக்க எனது சொந்த ஊர் தெரிந்தது. மனதுடன், உடலும் நொந்து கொண்டிருந்தது. அறைக்குள் நான் வாங்கிய அடிகள்.

சற்று விடியத்தொடங்கியது.

தெருவிலே கும்பலாகச் சனங்கள் நின்றார்கள்.

கண்களில் நீர் அடைத்துக்கொண்டது.



அங்கம்-7

அந்த ஜீப்பிலே என்னை ஏற்றியபோது, நன்றாகப் பார்ப்பதற்காக எல்லோரும் ஆவலாக மொய்த்தார்கள்.

இப்போது என்னை சிலோன்காரர் என்று அழைக்காமல், 'வேறுபெயர்' சொல்லி அழைத்தார்கள்.

சூரியன் உதிக்கத் தொடங்கியிருந்தான்

எனது ஊரிலும் தான்.

*-நிறைந்தது-*

## இலக்கியச்சோலை

# 'அவங்க பேசமாட்டாங்க'



அருட்தந்தை றொகான் பேனார்ட்

இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் - நீதிக்கும் சமாதானத்திற்குமான குழு நடத்திய, நாடளாவியரீதியில் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான நாடகப் போட்டியில், "அவங்க பேசமாட்டாங்க" எனும் நாடகம் முதலிடம் பெற்றிருந்தது.

சமகால சமூகநிலைப்பாடுகளையும், உலக வாழ்வியல் நீரோட்டத்தின் தன்மையையும், அழகாகச் சித்தரித்து இருக்கிறார்கள். மட்டக்களப்பு சகாயமாதா கோயில் அருட்தந்தை றொகான் பேர்ணாட்டின் நெறியாள்கையிலே இந்த நாடகம் உருப்பெற்றிருக்கின்றது.



அவங்க பேசமாட்டங்க நாடகத்தின் ஒருகாட்சி

இன்று உலகம் முழுவதும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும் எனும் உணர்வின் கீழ், ஒன்றிப்போய் இருக்கின்றது. சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்தும் நோக்கோடு - பல்வேறு நிறுவனங்களும், இயன்ற வரை தம்மாலான முயற்சிகளை எடுத்துக்கொண்டேயிருக்கிறார்கள். அத்தகையதொரு முயற்சியிலே தான் இறங்கியிருக்கிறார்கள், இலங்கைக்கான கத்தோலிக்க திருச்சபையின் நீதிக்கும் சமாதானத்திற்குமான குழுவினர். அதில் ஒரு கட்டமாக, அண்மையில் நாடளாவியரீதியில் தமிழ் மொழிமூலமாக சிறுவர் அபிவிருத்தியையும், மேம்பாட்டையும், பாதுகாப்பையும் கருப்பொருளாகக் கொண்ட நாடகப் போட்டிகளை நடத்தினார்கள். இந்தப் போட்டியில் - முதலிடம் பெற்ற நாடகம்தான் 'அவங்க பேசமாட்டாங்க' என்பது.

யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்ற நாடகப்போட்டிக்குப் பலவித சிரமங்களுக்கு மத்தியிலும், மீன் பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பின் - மாமாங்கப் பகுதியில் இருந்து வந்திருந்தார்கள் அருட்தந்தை றொகான் பேணார்ட் தலைமையிலான குழுவினர்.

'அவங்க பேசமாட்டாங்க' எனும் நாடகத்தின் மூலமாக இதுவரை பேசப்படாத பல உண்மைகள் பேசப்பட்டு இருக்கின்றன. சட்டத்துறைக்கும், நீதித்துறைக்கும், பாதுகாப்புத்துறைக்கும் - சாட்டையடி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

பல்வேறு ஊடகங்கள் மூலமாகவும், குறிப்பாக - திரைப் படத்துறை மூலமாகச் சிறுவர்களைத் தவறான வழியிலே கையாளும் தன்மையை, குறியீட்டு வடிவிலே காட்டுவதன்மூலமாகத் தமது நாடகத்தை ஆரம்பித்தார்கள்.

தற்போது சிறுவர் உரிமைகளை மீறும் வகையிலே - நடைபெற்றுக் கொண்டிருக்கும், வாயினால்கூட பேசமுடியாத அநாகரிகமான செயல்களை, நாசுக்கான முறையிலே, அரங்கத்தில் வெளிப்படுத்தியமை- அருட்தந்தையின் ஆற்றுகை அனுபவத்தை நன்கு புலப்படுத்துகிறது.

பாலியல் துஷ்பிரயோகம், ஓரின சேர்க்கைக்கு சிறுவர்களை ஆளாக்குதல் போன்ற விடயங்களை, தெளிவான முறையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

ஏழைச்சிறுவர்களை ஆக்கிரமித்த அநாகரிகச் செயல்கள், இறுதியில் அவர்களையே முழுமையாக விழுங்கி விடும் யதார்த்தத்தை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

உல்லாசப் பயணிகள் எனும் போர் வையிலே, எமது நாட்டை ஆக்கிரமிக்கும் வெளிநாட்டவர்கள் - எவ்வாறு எமது சிறுவர்களைத் தவறான வழியிலே கொண்டுசெல்கின்றனர் என்பதை, எதுவித அச்சமுமின்றி, ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

சிறுவர்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் அதிகரித்துள்ள வேளையில், அவற்றைக் கட்டுப்படுதத் தவறுகின்ற சட்டம், நீதி, பாதுகாப்புதுறைகளுக்கு- எதிராக பத்திரிகையாளன் ஒருவன் போர்க்கொடி தூக்குவதைக் காட்டுகின்றபோது, பல ஊடகவியலாளர்களுக்கு அது நெஞ்சைச் சற்று நெருடுவதாகவே உள்ளது.

அச்சமின்றி எதையும் அடித்துச்சொல்லும், கேட்கும், எழுதும் ஒரு பத்திரிகையாளன் - இதுவரை உருவாகவில்லை என்பதே அந்த நெருடலுக்கான காரணம். ஏன் அவ்வாறு ஒரு பத்திரிகையாளன் உரு வாகவில்லை என்பதற்கான மூலகாரணத்தையும் முழுமையாகக் காட்ட முனைந்திருக்கிறார்கள்.

சட்டத்தின ஓட்டைகளையும், ஓடிசல்களையும் - பாதுகாப்புத் துறையின் பாராமுகத்தையும், நீதித்துறையின் நியாயமற்ற தன்மையையும் நிதர்சனமாக்கியுள்ளார்கள்.

அநீதிக்கு எதிராகக் குரல்கொடுக்கும் பத்திரிகையாளனின் குரல்வளை, இறுதியில் நெரிகக்கப்படுகிறது. எந்தச் சமூகத்திற்காக அவன் குரல்கொடுத்தானோ, அந்தச் சமூகத்தைப் பார்த்து, அவன் அபயக்குரல் எழுப்பும் போது, காப்பாற்றச் சமூகம் தவறிவிடுகிறது. உண்மையை வெளிக்கொணர உழைத்த ஒருவனுக்கு - இறுதியில் மரணத்தையே பரிசாகக் கொடுக்கிறது சமுதாயம். இது நடந்த சம்பவங்கள் பகரும் உண்மையும்கூட. இந்த யதார்த்தத்தை - அரங்கம் மூலமாக வெளிக்கொணருகின்றார் அருட்தந்தை றொகான் பேர்ணாட்.

நாடகத்தில் பங்கேற்ற அனைத்து கலைஞர்களும்- தமது பாத்திரத்தை உணர்ந்து, அதற்கு உருவம் கொடுத்துள்ளார்கள். உடைஅமைப்புக்கள்கூடச் சரியான விதத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. காட்சிகளுக்கு ஏற்ற விதத்தில் பின்னணி இசை வழங்கிய - றொனால்ட்டும் பாராட்டத்தக்கவர்.

மொத்தத்தில் - சொல்லப்போனால் ஆளுமையும், அனுபவமும் மிக்க கலைஞர்களின் கூட்டு முயற்சியின் வெளிப்

## நாடக விமர்சனம்

பாடே "அவங்க பேசமாட்டாங்க" நாடகம்.

போட்டியில் முதற்பரிசு பெற்றதோடு, சிறந்த பின்னணி இசைக்கான பரிசையும் இந்த நாடக இசையமைப்பாளர் றொனால்ட் பெற்றுள்ளார். அத்தோடு, சிறந்த நடிகைக்கான விருதையும் இந்த நாடகத்தில் விதவைப் பெண்ணாக வேடமிட்ட கனிஸ்டா டிலிமா பெற்றுள்ளார்.

போட்டிக்கு நடுவர்களில் ஒருவராக கடமையாற்றிய, ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா - இதுபற்றிய தனது விமர்சனத்தில், அனைத்துதுறை விருதுகளையும் "அவங்க பேசமாட்டாங்களே" தான் பெறவேண்டிய நிலை ஏற்பட்டாலும், சில காரணங்களுக்காக நாம் அந்த முடிவில் இருந்து விலகியுள்ளோம், என்று கூறியது மட்டுமே போதும், "அவங்க பேசமாட்டாங்க"ளுக்கு கிடைத்த வெற்றிக்குச் சாட்சியமாக அமைகிறது.

இறுதியாக கூறுவதாக இருந்தால், எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொன்னார்கள். எதைச்சொல்ல வந்தார்களோ அதைச் சரியாகச் சொன்னார்கள் என்பதே எமது கருத்தாகும்.

**இ.சர்வேஸ்**

# நூல் அகம்

## இலங்கையின் பொருளாதார வரலாறு




'இலங்கையின் பொருளாதார வரலாறு வடக்குக் - கிழக்குப் பரிமாணம்' என்ற பெயரிலான, கலாநிதி வி.நித்தியானந்தம் எழுதிய நூல் வெளிவந்துள்ளது.

மஸ்ஸி பல்கலைக் கழகம், அல்பினி வளாகம், ஆக்லாந்து, நியூஸிலாந்து, யாழ்ப்பாணப் பலகலைக்கழகம் ஆகியவற்றில் இந்நூலின் ஆசிரியர் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்.

'புதிய ஈழத்தமிழர் தலைமுறையின் பெருந்தலைவருடன் என்னையும் சேர்த்து உற்பவித்த வல்வை மண்ணுக்கு, இந்நூல் சமர்ப்பணம்' என்று இந்நூலை - சமர்ப்பணம் செய்துள்ளார்.

எட்டு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இலங்கையின் பொருளாதார வரலாறு என்கின்ற நூல் - பல்வேறு விடயங்களையும் ஆராய்கின்றது.

முதலாவது அத்தியாயம் - 'பொருளாதார வரலாறும், வரலாறின்மையும் ஒரு முன்னுரை' என்பதாகும். இந்த அத்தியாயத்தின் வரலாறு தொடர்பான விளக்கமும், பொருளாதார வரலாறு பற்றிய உண்மைகளை இலங்கைத்தீவில் பொருத்திப் பார்த்து ஆய்வு செய்யும் முயற்சியும் இடம் பெறுகின்றது.

இரண்டாவது அத்தியாயத்தில் - 'பொருளாதார வரலாற்றுக்கான முன்கூட்டிய நிலைமைகள்' ஆய்வு செய்யப்படுகின்றன.

பொருளாதார வரலாற்றுக்கு முன்கூட்டிய நிலைமைகள் அரசியல் அமைப்பு, பொருளாதாரக் காரணிகள் தொடர்பான ஒரு ஆய்வு இந்த அத்தியாயத்தில் இடம் பெறுகின்றது. ஈழத்தமிழர் பொருளாதார வரலாற்றை ஆராயப்புகும்போது, அவர்களுக்குரிய தனித்துவத்தைத் தருகின்ற அம்சங்கள் எவை என்பது இந்த அத்தியாயத்தில் குறிக்கப்படுகின்றது.

மூன்றாவது அத்தியாயத்தில் - கூறப்படுகின்ற விடயம் 'யாழ்ப்பாண இராச்சியத்தின் பருநிலைப் பொருளாதார அமைப்பு' தொடர்பானதாகும். யாழ்ப்பாண இராச்சியமும், பருநிலைப் பொருளியற் செயற்பாடும் என்ற ஆய்வினையும், வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் ஆகிய தொழிற்துறைகள் - யாழ்ப்பாண இராச்சியப் பொருளாதாரத்தைப் பெற்றிருந்த இடத்தையும் இந்த அத்தியாயம் ஆய்வு செய்கின்றது.

நவீன பொருளாதாரமொன்றில் அனைத்துச் சாயல்களையும் கொண்டு வளர்ச்சிபெற்ற பொருளாதாரமாக யாழ்ப்பாண இராச்சியப் பொருளாதாரம் நிலவியது என்பதை இந்த அத்தியாயம கூறுகின்றது.

காலனித்துவப் பொருளாதாரம் - போச்சின் எழுச்சி என்ற நான்காவது அத்தியாயம். போர்த்துக்கேயர், டச்சுக்காரர் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி தொடர்பாக ஆய்வு செய்கின்றது. வாணிபவாதி யுகத்தைச் சார்ந்த காலனித்துவம் - வடக்குக் கிழக்குப் பொருளாதாரத்தை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை என்பதை இந்த அத்தியாயத்தில் குறிப்பிடுகின்றார்.

காலனித்துவ பொருளாதாரம் போச்சின் வளர்ச்சி பிரித்தானியர்காலம் என்பது, ஐந்தாவது அத்தியாயமாகும். பிரித்தானிய வாணிபத் தாக்கம் எவ்வாறு இருந்தது என்பது தொடர்பாகவும், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் வருகையால் வடக்கு - கிழக்கு புறக்கணிக்கப்பட்டமையும், 'சுக்கானை இழந்த படகுபோல' திசை தெரியாது தத்தளித்து தடுமாறுகின்ற பொருளாதாரமாக பிரித்தானியர் கால இலங்கை பொருளாதாரம் நிலவியது என எடுத்துக்காட்டப்படுகின்றது.

ஈழத்தமிழர் கல்வியின் பொருளியல் என்பது - ஆறாவது அத்தியாயமாகும். பிரித்தானியர் காலத்தில் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்களையும், இக்காலத்தில் கல்விக்கும் சமூகத்திற்கும் எத்தகைய தொடர்பு இருந்தது என்பது தொடர்பாகவும், பொருளாதாரத்தில் கல்வி பெறநிருந்த இடத்தையும் இந்த அத்தியாயம் அலசுகின்றது.

பௌதீக வளங்களின் பாவனை என்கின்ற ஏழாவது அத்தியாயம், காலனித்துவ ஆட்சியாளர்கள் - இலங்கையின் பொருளாதாரத்தினை 'வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோன்று' எவ்வாறு சுரண்டினார்கள் என்பது தொடர்பான கருத்துக்கள் ஆராயப்படுகின்றன.

'பொருளாதார வரலாறும், வரலாறு இன்மையும் ஒரு பின்னுரை' இறுதி எட்டாவது அத்தியாயமாகும். அரசியலும் பொருளாதாரமும் ஒத்திசைந்து செல்லுகின்ற தன்மையும், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி தொடர்பாக ஆய்வுக்கு உட்படுத்தவேண்டிய விடயங்களும் இவ்வத்தியாயத்தில் இடம்பெறுகின்றன.

**பூ.நகுலன்**


## மெய் பொம்மை



நேற்றை இரவு நிறைந்தது கனவுகளால்.
தூக்கத்தைக் கைப்பற்றித்
தோற்றத்தில் நிஜம்போல
நான்மயங்க வைத்து யதார்த்தப் பொழுதொன்றாய்.
என்னைக் கனவுகள்
எங்கெங்கோ கொண்டுசென்று
தெப்பென்று காலையிலே பாயில் எறிந்தனவாம்.
அன்னப் பறவை இரண்டின் அலகிற் சுமபட்டு
பிடிநழுவிப் பாதியிலே
வீழ்ந்த ஆமை போல் நொந்தேன்.
விழித்தெழுந்து விழிகள் கசக்கித் திருதிரென்று விழித்தேன்
துண்டுதுண்டாய் முழுக்கனவும்
எண்ணத்திற் தொடர்பு இல்லாத காட்சிகளாய்
பாதை தனைமறைத்து
ஏதோ சில விம்பம்
தூரத் தெரிவதுவாய் தெளிவற்றுத் தெரிகிறது!
கனவுகளின் கைப்பொம்மையாகப்
புரண்டிருந்த
எனைஎனது கட்டுக்குள் கொண்டுவந்தேன்.
உறக்கத்தின்
பாதியினைப் பந்தாடி
அலைந்த கனவுகளை
எவையென்று தெளிவதிலே
'விழிபொழுது' கழிகிறது.

**த.ஜெயசீலன்**

## கவிதைச்சோலை



பெரும் அவாவுடனும்,
ஆரவாரங்களுடனும் தொடங்கியது
இந்த
இரசாயன வாழ்வு - இதுவரை
எத்தனங்களே வாழ்வின் முழுப்பயனாய்
நங்கூரமிட்டபடியுள்ளன...!
பிரமிப்போ;
அதிர்ச்சியூட்டலோ,
ஆனதொரு மகிழ்வோ எட்டியதில்லை
எவ்வுயிரும்...!
'வற்றாத கண்ணீர் தொடர்ந்தபடிதான் உள்ளன...'
சிலவேளை ஆனந்தமாக...;
சிலவேளை அவலமாக...
காத்திரமாய் இருப்பதெனக்கூறி
விருந்தாளிகள் மெய்சிலிர்த்துக் கொள்கின்றனர்.
வெளியில்....!
'நாமறிவோம்'
தூக்கணாம் குருவிக் கூட்டிற்கு
காக்கை
தும்பெடாது என்பதையும்;
ஆசியாவின் வெள்ளி
இமை திறவாதிருப்பதையும் - இன்னும் நாம்
விலங்குகளின்
உள் அணைத்துள்ளோம் என்பதையும்
நன்கறிவோம்...!
பொங்கிப் பிரவாகித்து...
அனல் வீசி...
சீற்றமுடன் அடைவெய்துகை
இப்போது இயலும்...!
அன்பு...
கருணை...
நவிற்சி அதனிலும்...
இளகு தன்மை...
தாராளம்...
கூட்டியைவு, இவைகள் பற்றி
உங்களுக்குப் புரியாத போது
நாம் என்ன செய்வது?...
... அதுவே நிகழும் ...!

**ஏ.மருதம் கேதீஸ்வரன்**

## கிழக்கும் மேற்கும்

### ஔவையார் - சோக்கிரட்டீஸ்



ஔவையின் உள்ளத்தில்
முளைவிட்ட செருக்கினைக்
களைந்தாட் கொண்டிடத்
திருவுள்ளம் கொண்டு
இடைக்குலச் சிறுவனாய்
நாவலில் இடம் கொண்ட
முருகப் பெருமானிடம்
'சுடுகனி' பெற்ற ஔவை
அகத்தினில் முளைவிட்ட
அகந்தையைக் களைந்தார்!

சேர நன்னாட் டினில்
தகடூர் நாட்டினை
மன்னன் அதியமான்
நல்லாட்சி செய்தான்!!
முனிவரொருவரால்
அருளிடப் பெற்ற –
அதனை உண்பவரை
பன்னெடுங்காலம்
அவனியில் வாழ்விக்கும்
அதிசய நெல்லிக்கனியினை –
ஔவை மீதுற்ற
அளப்பரும் அன்பினால்
நெல்லிக்கனியினை
உண்ணத்தக்கவர்
ஔவையென்றுணர்ந்ததால் –
ஔவைக்கு கனியினை
அளித்தான் அதியமான்!
கனியுண்ட பின்னரே
கனியின் மகிமையை
அறிந்த ஔவையார் –
தன் மேல் அதியமான்
கொண்டுள்ள அன்பின்
ஆழத்தை உணர்ந்து –
அறிஞரை நெடுங்காலம்
வாழ்விக்கத் துடிக்கும்
ஆர்வத்தை உணர்ந்து –
உள்ளம் மகிழ்ந்து
உள்ளம் நெகிழ்ந்து
போற்றிப் பாடினார்!
வாழ்த்திப்பாடினார்!!

குலோத்துங்க மன்னனின்
திருமண வேளையில்
அரசரும் அறிஞரும்
புலவரும் புரவலரும்
பொலிந்த அவையினில்
'வரப்புயரநீருயரும்''
எனும் உயர் பாடலால்
அரசனை வாழ்த்தவே –
அவரது பாடலின்
அதியுயர் சிறப்பினை
உணர்ந்த அவையினர்
அப்பா பாடிய
ஔவையை வாழ்த்தினர்!

'இட்டார் பெரியோர்
இடாதார் சிறியோர்' –
என்றிரு சாதியே
இகத்தினில் உண்டென்று
தாமுரைத்த நீதியைத்
தரணியில் நிறுவிடப்
பொருத்தமாயொரு
நிகழ்வொன்றில் ஔவையார்.
பாண்டிய நாட்டிலோர்,
ஊர்வழி நடந்த
மூதாட்டி ஔவைக்குப்
பசி வருத்தியது!

(தொடரும்)

**முருகு**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

நாடாது நட்டலிற் கேடில்லை நட்பின்
விடில்லை நட்புஆள் பவர்க்கு.

- திருக்குறள்

## நமது நோக்கு

# ஒட்டாத கூட்டும்... வெட்டாத உறவும்..!

பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டணி ஒன்றை அமைப்பதற்காக மக்கள் விடுதலை முன்னணியினர் அதாவது ஜே.வி.பியினர் கடந்த ஏழுமாத காலமாக மேற்கொண்டு வந்த இழுபறி நிலையிலான பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டதாக ஜே.வி.பியினரே அறிவித்துவிட்டனர்.

வெறும் அற்பத்தனமான சுயநல அரசியல் அபிலாஷைகளை மட்டும் இலக்குவைத்து, இருதரப்பினருமே ஒருவரையொருவர் சந்தேகித்த வண்ணம், அரசியல் ரீதியிலான கொள்கை மற்றும் கோட்பாடுகளின் அடிப்படையிலான ஒருமைப்பாட்டு செயல்நோக்கு எதுவுமின்றி மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளில் இருதரப்பும் உடன்பாடு காணப்படாது போனதொன்றும் வியப்புக்குரிய விடயமல்ல.

ஜே.வி.பிக்கும் சரி, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் சரி, அதிகார அரசியல் பீடத்தில் ஆதிக்க சக்தியாக நிலைகொண்டிருந்து கொண்டு அரசியல் மேலாதிக்க நிலையை தமதாக்கிக் கொள்வது மட்டுமே இலட்சியமாக இருந்தது.

ரணில் தலைமையிலான அரசைப் பதவியில் இருந்து அகற்ற வேண்டும், சமாதான நகர்வுகளை - சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் அந்த அரசு முன்னெடுத்துச் செல்வதை தடுக்கவேண்டும். என்பனவற்றில் மட்டுமே முரண்பாடுகளின் மூட்டைகளாக விளங்கிய சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையே ஒரு உடன்பாடு தவிர்க்க முடியாத வகையில் ஏற்படும் சாத்தியம் இருப்பதாக முதலில் உணரப்பட்டது.

இருப்பினும்கூட ஒருவருக்கொருவர் நம்பிக்கையும் விசுவாசமுமற்ற நிலையில், ஒரு பொது எதிரியை தோற்கடிக்க அல்லது அவனது வலுவைச் சிதைக்க, குறுகிய லாப நோக்கச் சிந்தனைகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு கூட்டுச்சேர முயல்வதென்பது இறுக்கமான, தெளிவும் உறுதியும் கொண்ட கூட்டணியொன்றின் உருவாக்கத்திற்கு வழிகோலும் என எவரும் - அரசியல் தெளிவுள்ள எவரும்- நம்புவது கடினமான ஒன்றேயாகும்.

ஜே.வி.பியுடன் பொதுசன ஐக்கிய முன்னணியோ - அல்லது அதன் பிரதான அங்கமான சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டிய தேவையும், ஜே.வி.பியும் அதனை வரவேற்று உடன்பாடு காணவேண்டிய அவசியமும் ஏற்படக் காரணமான விடயங்கள் அனைத்தும் இருதரப்பினரதும் பலவீனங்களின் அடிப்படையில் உருவானவைகளேயாகும்.

பொதுசன ஐக்கியமுன்னணிக்கு ரணில் ஆட்சியை கலைத்து மாற்று அரசாங்கம் ஒன்றை உருவாக்கவோ, அல்லது எதிர்வரவுள்ள தேர்தல்களில் ஐக்கிய தேசிய முன்னணியை தோற்கடிக்கவோ வலுவான ஆதரவுப் பின்பலம் ஒன்றின் தேவை இருந்தது... ஏன் இன்னமும் இருக்கவே செய்கிறது.

அதேவேளை, ஜே.வி.பி. சுயாதீனமாக - சொந்தக் கொள்கைகளின் பலத்தில் நின்று தனது இன்றைய அரசியல் செல்வாக்கு நிலையைத் தக்கவைத்துக் கொள்ளும் திராணியற்ற ஒன்றாகவே உள்ளது.

இந்த நிலையில் இரு பலவீனர்களும் இணைந்து ஒரு பலமான அணியைத் தோற்றுவிக்கலாம் என்று எண்ணியது விசித்திரமான ஒன்றாகும். பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவி சந்திரிகா தனது கணவரைக் கொன்றவர்கள் என தன்னாலேயே விரல்சுட்டிக் குற்றஞ்சாட்டப்பட்ட ஜே.வி.பியினருடன் கூட்டணி வைத்துக்கொள்ள முன்வந்தது ஒரு வகையிலான அரசியல் அயோக்கியத்தனம் என்றால், தம்மைக் கொலைகாரர்கள் எனக் குற்றஞ்சாட்டிய சந்திரிகாவை நம்பி, வீரவன்ச குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தி கூட்டுசேர முயன்றது மோசமான கோமாளித்தனமாகும்.

ஆனாலும் ஏழு மாதங்கள் பேசினார்கள்.

அடுத்த ஜனாதிபதிக் கனவில் மிதக்கும் அநுரா பண்டாரநாயக்க கிட்டத்தட்ட ஒரு ஜே.வி.பி. உறுப்பினராகவே மாறி செயற்படுமளவிற்கு - கூட்டணியை உருவாக்குவதற்கு சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுப்பவராக விளங்கினார்.

ஆனாலும் இனப்பிரச்சினை தொடர்பான சந்திரிகாவின் நிலைப்பாட்டை ஜே.வி.பி. ஏற்கவில்லை என்பதால், பேச்சுவார்த்தை தோல்வி கண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானத்திற்கான யுத்தம் என்ற தத்துவத்தின் தலைவியான சந்திரிகாவின் இனப்பிரச்சனை தொடர்பான தீர்வு நிலைப்பாட்டையே ஜே.வி.பியால் ஆதரிக்க முடிவில்லையெனில், ஜே.வி.பியின் சுய நிலைப்பாடு எப்படி இருக்கும் என்று கூறத்தேவையில்லை.


ஆனாலும் அநுரா விடுபவராக இல்லை. பேச்சுவார்த்தை தோற்றாலும் அடுத்த தேர்தலில் இருதரப்பும் இணைந்து போட்டியிடும் என்று கூறியுள்ளமையைக் கருத்தில் கொண்டு பார்த்தால், விட்டகுறை தொட்டகுறையாகத் தொடரும் நிலை இருக்கும் போலவே தேன்றுகின்றது.

ஜே.வி.பியை முற்றாகக் கைகழுவிவிட சந்திரிகா பலமாகவும் இல்லை. சந்திரிகாவைப் புறந்தள்ளிவிட்டு தனியாக இயங்க ஜே.வி.பிக்கு தைரியமும் கிடையாது.

இந்த நிலையில் அடுத்துவரவுள்ள மாகாணசபைகளுக்கான தேர்தல் உட்பட உள்ளூராட்சி தேர்தல்களையும் கவனத்தில் கொண்டுபார்த்தால்... மழை விட்டாலும் தூவானம் நிற்காத நிலை தொடரும் போன்றே தெரிகின்றது. அரசியலைப் பொறுத்த மட்டில் பலம் பலவீனங்களைச் சாராது, பலவீனமோ பலத்துடனான தொடர்பை விடாது... ஆனால் இரண்டு பலவீனங்கள் என்ன செய்யும்...?

பலமாக இருப்பதாக உணர்த்தவே முயலும்!

## நாடும் நடப்பும்




# ஐக்கியதேசிய முன்னணியிடம் இருந்து அரசை பொறுப்பேற்கவேண்டிய தருணம் வந்துவிட்டது

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியிடமிருந்து அரசை மீளப் பொறுப்பேற்கவேண்டிய தருணம் வந்துவிட்டதென, ஜனாதிபதி சந்திரிகா - குருநாகலில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஐம்பத்து இரண்டாவது வருட மாநாடடில் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றும்போது -

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது சொந்தக் காலில் நின்று, சகல சவால்களையும் சமாளிக்கும் வல்லமையைக் கொண்டுள்ளதாகவும், மக்களின் ஆதரவுடன் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி- எந்தக் கட்சிக்கும் கையாளாகச் செயற்படுவதற்குத் தயாராக இல்லை. சுதந திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் சிக்கல்கள் இருக்கின்றபோதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி கொள்கைகளை முன்னெடுக்க தவறமாட்டாது.

ஜே.வி.பியும், சுதந்திரக் கட்சியும் ஒன்றாகச் செயற்படமுடியும். ஆனாலும், சுதந்திரக் கட்சி தனது கொள்கைகளின் இறுக்கத்தைத் தளர்த்திக் கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

தூய்மையானவர் என்று உருவகிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்க - பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து தவறிவிட்டதாகக் குற்றம்சாட்டிய சந்திரிகா, நாட்டைப் பாதுகாப்பதற்குத் தனது பொறுப்புக்களை மீளப்பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நாட்டுமக்கள் திரண்டு, ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என கூறுகிறார். ஆனால், அதேமக்கள் - நாட்டைப் பாதுகாப்பதற்கென ஆணையை வழங்கியிருப்பதாகவும் சந்திரிகா கூறினார்.

தனது மாமனார் உருவாக்கிய அரசியல் யாப்பைக் கவனமாகப் படிக்கவேண்டும் எனக்கூறிய சந்திரிகா, மனித உரிமையையும், தேசிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்தத் தவறிவிட்டதாகவும் குற்றஞ்சாட்டினார்.

தான், ஐக்கிய தேசிய முன்னணி அரசைப் பயத்தின் பேரில் கலைக்கவிரும்பவில்லை எனவும், தனது பெற்றோர் தனக்குப் புகட்டியுள்ள ஜனநாயக அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே அதனை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகள் பற்றி கருத்து வெளியிடுகையில் - அரசாங்கம் முதுகெலும்பற்ற நிலையில் செயற்படுகிறது எனவும், தான் அவ்வாறு செயற்படப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

இன்றைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு - நாடு இரண்டாகப் பிரிந்துபோனாலும், தான் பதவியிலிருந்தால் போதும் என நினைக்கிறது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நீர்த்தேக்கங்களின் அழகை ரசிக்க சிறியரக விமான சேவை வசதிகள்!

## உல்லாசப் பிரயாணிகளுக்காக ஏற்பாடு

உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில், சிறியரக விமானசேவை ஒன்றை நடத்துவதற்கு மத்திய பிராந்திய அபிவிருத்தி அமைச்சு துரித நடவடிக்கைகளை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள பிரதான நீர்த்தேங்கங்கள், இயற்கை நீர் வீழ்ச்சிகள் ஆகியவற்றைக் கண்டுகளிப்பதற்கு, இந்தச் சிறியரக விமானசேவை மூலம், உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்கு முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெந்தோட்ட கடற்கரை, திருகோணமலை, நிலாவெளி கடற்கரைகள், மட்டக்களப்பு வாவி, பொலகொல்ல, ரந்தெனிகல, கந்தலம, விக்டோரியா, கொத்மலை, பராக்கிரம சமுத்திரம், அனுராதபுரம், கண்டி வாவி, திஸவெவ வாவி போன்ற குளங்கள், நீர்வீழ்ச்சிப் பகுதிகளுக்கு- இந்த விமானசேவைகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுமார் 9 பயணிகள் பயணிக்கக்கூடிய சிறிய விமானங்கள் இந்தச் சேவைக்காகப் பயண்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கதிர்காமர் கூறிய கருத்து சரியானது; கடற்படைத் தலைமையகம் தெரிவிப்பு!

(திருகோணமலை)

திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து விடுதலைப் புலிகளால் உடனடியாக ஆபத்துடன்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக - லக்ஷ்மன் கதிர்காமர் கூறியது மிகவும் சரியான கருத்து என்று, கடற்படைத் தலைமையகம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையைச் சுற்றிலும் விடுதலைப் புலிகள் தமது நிலைகளைத் தொடர்ந்து பலப்படுத்துவதில் வெற்றி காண்பார்களேயானால், அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என எச்சரித்திருந்தார்.

இதற்கு, பிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் வசந்த கரணகொட வழங்கிய தகவல்களை வைத்து, கதிர்காமர் கற்பனை கதைகளை அவிழ்த்துவிட்டாரென ஐக்கிய தேசிய முன்னணி அரசு குற்றம்சாட்டியுள்ளது.

மேற்படி கடற்படை தலைமையகப் பேச்சாளர் கப்டன் ஜயந்த பெரேரா, நேற்றுமுன்தினம் இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில் - கதிர்காமருக்கு, தான் வழங்கிய நம்பிக்கை பூர்வமான அறிக்கையின் அடிப்படையிலான தகவல்கள் யாவும் தம்மிடம் உள்ளதாக தெரிவித்தார்.

கடந்தமாதம் நான்காம் திகதி ஜனாதிபதி இல்லத்தில் சந்திரிகா சமுகமளித்திருக்காத ஒரு கூட்டத்தில், மேற்படி கிழக்கு பிராந்திய கடற்படைத்தளபதி - கதிர்காமருக்கு கிழக்கின் பாதுகாப்பு நிலவரம் குறித்து விளக்கியிருந்தார்.

இதன்போது, இராணுவத்தளபதி பலகல்ல - கடற்படை தளபதி தயா சந்தகிரி மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலரும், தற்போதைய ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகருமான சந்திரானந்த டீ சில்வாவும் சமுகமளித்திருந்தார்கள்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன - திருகோணமலைக்கு மேற்கொண்ட இரண்டு நாள் விஜயத்தின்போது, கடற்படைத்தளபதி தயா சந்தகிரியின் முன்னிலையில் வைத்து, கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி இது பற்றி எதுவும் கூறாது, கேந்திர முக்கியத் துவம்மிக்க திருமலை துறைமுகத்தின் தென்பகுதியில், புதிய கடற்படை முகாம்களை உருவாக்குவது பற்றி ஆராயப்பட்டது.


ஆனால், இந்தமாதம் முதலாம் திகதி கதிர்காமருக்கு கொடுத்த இதேவிளக்கம், பாதுகாப்பு அமைச்சருக்கும், பாதுகாப்பு செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கும் வழங்கப்பட்டது. இதன்போது, சமுகமளித்த அதிகாரிகளுள்- இராணுவ நடவடிக்கை பணிப்பாளரும் அடங்குவார். இதன்போது, அவர்கள் யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகள் - திருமலை துறைமுகத்தில் கவனம் செலுத்துகின்றனர் எனக் குற்றஞ்சாட்டினார்.

# தென்னிலங்கையில் தடுமாறும் அரசியலில் தனித்துப் போட்டியிட முடியாத கட்சிகள்!

## தெற்குத் திசையினிலே...

**கொழும்பிலிருந்து இந்திரஜித்**

அரசியல் என்றால் சாக்கடை என்ற உண்மையானது, தற்சமயம் இலங்கை அரசியலைப் பார்த்தால் புலப்படுகிறது. இலங்கையின் அரசியல் - தேசிய நலனைக்கொண்ட அரசியல் அல்ல. கட்சி நலனைக் கொண்ட அரசியல் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால், அது இன்று மேலும் வலுவுற்று, கட்சிக்கு அப்பாற்பட்டு, சொந்த நலன் என்ற அளவிற்குச் சென்றுள்ளது. இதன் காரணமாக - மக்கள் கட்சியை நம்பி பங்களிபபு நிலைப்பாட்டையும் கைவிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.



ஏற்கனவே இலங்கையைப் பொறுத்தவரை, ஒரு கட்சியில் இணைந்து தேர்தலில் போட்டியிடும் ஒருவர், அந்தக் கட்சி தோற்றுப் போனால், மாற்றுக் கட்சிக்கு மாறும் சந்தர்ப்பங்களை நாம் கண்டிருக்கிறோம். அல்லது தேர்தலில் வெற்றி பெற்று, ஆட்சிக்கு வந்து, ஆட்சி கவிழபபோகிறது என்றால், ஆட்சிக்கு வரலாம் என எதிர்பார்க்கின்ற கட்சிக்குத் தப்பிச்செல்லும் போக்கும் இலங்கையில் காணப்படுகிறது.

இதன் அடிப்படையிலேயே, இன்று சொந்த நலன் அரசியல் மேலோங்கி நிற்கிறது. இந்தச் சொந்த நலன் அரசியல் - முன்னர் இருந்ததில்லை எனச் சொல்லமுடியாது. அது இன்று தீவிரத் தன்மையைப் பெற்றிருப்பதையே இங்கு நோக்கவேண்டியுள்ளது. கூட்டாகப் பல நாடுகளில், இந்த அரசியலின் நம்பகத்தன்மையை அவ்வப்போது நாம் கேள்விப்பட்டு இருக்கிறோம். அமைச்சர்- தமது அமைச்சுப் பொறுப்பால் ஏதாவது பிழை ஏற்பட்டால், அல்லது தமது அமைச்சின் கீழ்வரும் துறை ஒன்றில் நீண்டநாள் போராட்டம் எதுவும் இடம்பெற்றால், உடனடியாகப் பதவிவிலகும் - மதிக்கத்தக்க அரசியல் பற்றி அறிந்திருக்கிறோம். ஜப்பானில் இது அமைச்சரவைக் கீழ் மட்டத்தில் இருந்து, தலைமை மட்டம்வரை இடம்பெறும் செயலாகும்.

ஆனால், அமெரிக்கா உட்படப் பிரதான முதலாளித்துவ மற்றும் கம்யூனிஸ நாடுகளில் - இந்த சிறப்பு அரசியலைக் காணமுடியவில்லை. அண்மை நாடான இந்தியாவிலும் கூட, இந்த நல்லெண்ண அரசியலை அடிக்கடி நாம் கேள்விப்படுகிறோம். தம்மீது நம்பிக்கையீனம் வெளியிடப்பட்டமையால், கடந்த ஒருவருடத்துக்கு முன்னர் - இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பதவி விலகியமை இதற்கு உதாரணமாகும்.

சரி, எமது சர்வதேசப் பார்வையை மாற்றி, இலங்கையின் தென்னிலங்கைச் சிங்கள மற்றும் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் நம்பகத்தன்மையைப் பற்றிப் பார்ப்போம். ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஆரம்பிக்கப்பட்டது முதல், இந்தக் கட்சிகள் மாறல்களுககு ஆளாகி வந்தன. S.W.R.D.பண்டாரநாயக்க உட்படப் பலர் கட்சியிலிருந்து, கொள்கை காரணமாகவோ அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காகவோ- பிரிந்துசென்ற தன்மை காணப்பட்டது. ஆனால், 1950 ஆம் ஆண்டினை அண்டிய காலப்பகுதிகளில், கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் போட்ட அடித்தளங்கள்- இன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்ற பிரதான கட்சியின் தேசிய கட்சிகளாகச் செயற்படும் அளவிற்கு உயர்ந்துள்ளன.

ஆனால், கம்யூனிஸ கட்சிகள் உட்பட - தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகக் கட்சிகள், தமது வரையறைக்குள்ளேயே உயரும் அளவிற்கு, அரசியலை நடத்தி வருகின்றன. கம்யூனிஸ் கட்சிகளைப் பொறுத்தவரையில், அவற்றின் சந்தர்ப்பவாதமற்ற தன்மைகூட, அவற்றின் வளர்ச்சியைப் பாதித்திருந்தன எனக்கூறலாம்.

அரிசியின் 25 சதவீத விலை உயர்வை எதிர்த்து, இலங்கையில் முதன் முதலாக ஹர்த்தாலை நடத்திக் காட்டிய கம்யூனிஸ கட்சிகள், அன்று நினைத்திருந்தால், ஐக்கிய தேசயக் கட்சியின் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கலாம். ஆனால், எந்த நோக்கத்துக்காகப் போராட்டம் நடத்தப்பட்டதோ, அதிலிருந்து ஒரு படி கூட எடுத்துவைக்கக் கம்யூனிஸ் கட்சிகள் துணியவில்லை.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸைப் பொறுத்தவரையில், சுமார் 50 ஆண்டு வரலாற்றைக் கொண்டுள்ளபோதும், ஒரு தேசிய கட்சி வளர்ச்சிபெறும் அளவிற்கு, அதன் அரசியல் விவேகம் அமையவில்லை. தொடர்ந்தும் தொழிற்சங்கமாகவே செயற்படுவது என்ற அதன் எண்ணம், இன்றும் அதன் வளர்ச்சியைப் பாதித்துக்கொண்டிருக்கிறது. மலையகத்தில்கூட அதன் செல்வாக்கில் தொடர்ந்து பாதிப்பு ஏற்பட்டு வந்திருக்கிறது. ஆட்சியதிகாரத்துக்குத் துணைபோகும் கட்சியாகவே அது இன்னமும் இருந்து வருகிறது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்- கட்சிரீதியாக அண்மையகால வரலாற்றைக் கொண்டுள்ளபோதும், இன்று மூன்றாவது சிறுபான்மைச் சமூகமாகவே சர்வதேச அளவில் பேசப்பட்டாலும்கூட, இன்னமும் தமது கட்சி அரசியலை - மலையகம் என்ற கட்டுக்குள்ளேயே அடக்கிக்கொண்டிருக்கிறது.

இலங்கை தமிழ்க் காங்கிரஸின் மறைந்த அதன் தலைவர் குமார் பொன்னம்பலம் இருந்தவேளையில் மலையகத்திலும் தமது கட்சியுடன் இணைந்த அமைப்பொன்றை ஏற்படுத்த முயற்சித்திருக்கிறார். ஆனால், அது அவரின் மரணத்தின் பின்னர் செயலிழந்துபோனது. தென்னிலங்கை அர சியலில் இதுவரை நாம் பார்த்த சிறிய கட்சிகள் அனைத்துமே - பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தமது மக்களின் வாக்குக்ளைப் பெற்றுக்கொடுக்கும் பணிகளைச் செய்துவந்திருக்கின்றன. ஆனால், தமது மக்களை ஒன்றிணைத்து, தேசியகட்சிகளிடம் பேரம்பேசும் அளவிற்கு உறுதித்தன்மையை இவை பெறவில்லை.

இந்த நிலையில், தென்னிலங்கையின் அரசியல் இன்று நிலையற்றுப்போயிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது சிறிலங்கா சுதந்திரக் கடசியோ, தனித்து நின்று தேர்தலில் வெற்றிபெறும் அந்தஸ்தை இழந்து நிற்கின்றன. இதன் காரணமாகவே இலங்கையில் கடந்த அரை நூற்றாண்டுகளாகத் தொடரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக காணமுடியாமல் இருக்கிறது. பொதுவாக ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமக்கிடையே பலவிதத்திலும் ஒத்திசைவுத் தன்மையைக் கொண்டிருக்கின்றன. ஆனால், ஆட்சிபீடம் என வருகிறபோது, அவற்றுக்கிடை யில் பாரிய இடைவெளிகள் ஏற்படுகின்றன.

இன்றைய இனப்பிரச்சினைத் தீர்வு முன்னெடுப்பிலும்கூட, ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் - தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனால, அதனை மனந்திறந்து சிங்கள மக்களின் ஒப்புதலுடன் வழங்குவற்கு அவை தயங்குகின்றன. சிங்கள மக்கள் மத்தியில் இந்த அதிகாரப் பகிர்வு குறித்தோ அல்லது இனப் பிரச்சினைத் தீர்வு குறித்தோ, எதிர்ப்புத்தனமை இன்றையநிலையில் குறைந்தே காணப்படுகிறது. ஆனால, அந்த எதிர்ப்புத் தன்மையைக் கூட்டிவிடும் பணிகளில் கட்சிகள் ஈடுபடுகின்றன. இதன் காரணமாக மக்கள் - இனவாதத் தூண்டுதலுக்கு உள்ளாகின்றனர்.

காலத்துக்குக்காலம் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படும்வேளைகளில், பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் எழுவது வழக்கமாகிவிட்டது. தமிழ் மக்களின் கூடிய வாக்கு வித்தியாசத்தில், முதற்தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க- அதிகார்ப பரவலாக்கத்தைப் பற்றி ஆலோசனை தெரிவித்தபோது, அதனை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்தது. ஏனெனில், தாம் இந்தியக் கூட்டுடன் முன்வைத்த மாகாணசபைத் தீர்வை காட்டிலும், ஜனாதிபதியின் தீர்வு - சமாதானத்தை ஏற்படுத்திவிடுமானால், அது தமது கட்சி அரசியலின் அஸ்தமனத்திற்கு வழிவகுத்துவிடும் என ஐக்கியதேசியக் கட்சி நினைத்தது.

எனவே, ஜனாதிபதியின் தீர்வுத் திட்டநகலை - நாடாளுமன்றத்தில் வைத்து எரியூட்டி, தமது 'ஜனநாயகத்தை' மக்கள் முன்னிலையில் வெளிப்படுத்தியது. தற்சமயம் அதே ஐக்கிய தேசியக் கட்சி - ஜனாதிபதியின் அதிகாரப் பகிர்வுத் தீர்வைக் காட்டிலும், அதிகபட்ச அதிகார பகிர்வுக்கு உடன்பட அவசியம் ஏற்பட்டுள்ளது. இதை வழமை போலவே ஜனாதிபதியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, எதிர்த்து வருகிறது. இந்த எதிர்ப்பு எவ்வளவு தூரத்திற்கு நியாயமானது என்பது அந்தக் கட்சிக்கே புரியாமல் போயுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான தற்போதைய முன்னெடுப்பை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலுவான நிலையில் எதிர்க்குமானால், அது நிச்சயம் மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டமைப்புக்கு இணக்கம் தெரிவித்திருப்பார்கள். ஆனால், கூட்டமைப்புக்குத் தடையாக இருந்த ஒற்றையாட்சி மற்றும் அதிகாரப் பரவலாக்கல் என்ற இரண்டு விடயங்களிலும், மக்கள் விடுதலை முன்னணியின் எதிாப்பு நிலைப்பாட்டை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. இதிலிருந்து இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு- ஒற்றையாட்சி முறையின்கீழ் தீர்வுகாணமுடியாது என்பதைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பொறுப்புடன் ஏற்றுக்கொண்டுள்ளது. அத்துடன், அதிகாரப் பரவலாக்கல் ஒன்றின்மூலமே, இந்த இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்பதையும் அந்தக் கட்சி கோடிட்டுக் காட்டியுள்ளது. அப்படியானால், ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரப் பரவலாக்கல் யோசனையை அது எதிர்ப்பதன் காரணம் என்ன? இதற்கு உரிய பதில் - தேசிய நலனைக் காட்டிலும், கட்சி நலனே என்பதாகும்.



ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் தற்சமயம் ஏற்பட்டுள்ள முறுகல் - அரசியல் முறுகல் அல்ல. கௌரவ முறுகலாகும். கடந்த ஜனாதிபதி தேர்தலில் - சந்திரிகா பணடாரநாயக்க குமாரதுங்க -ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும், அதன் பின்னர் வந்த பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார். இந்த நிலையில், பின்னர் வந்த பிரதமருக்கே நாட்டு மக்கள் தமது முழு ஆதரவையும் தெரிவித்தனர். எனினும், ஜனாதிபதியினால் இதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இலங்கையின் 1977 ஆம் ஆண்டு அரசியலமைப்பைப் பயன் படுத்திக் கொண்ட அவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவே செயற்பட முனைந்து வருகிறார். இதற்கு மாறாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக இருக்கிறபோதும், அவரை ஆட்டிப் படைக்கும் வகையிலேயே செயற்பட்டு வருகிறார்.

எனவே, தற்சமயம் இலங்கையில் சொந்த, கௌரவ அரசியல் நகர்வு இடம்பெற்று வருகிறது. இது கட்சி அரசியலைக் காட்டிலும், நாட்டின் நலனை மிகவும் பாதித்துள்ளது.

அண்மையில் இது சர்வதேச மட்டத்திற்குச் சென்றுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை அமர்வில் பங்கு கொள்ள - ஜனாதிபதிக்கு வந்த அழைப்புக் கடிதம் மறுக்கப்பட்டு விட்டதாக ஜனாதிபதி குற்றம் சுமத்துகிறார். ஆனால், அழைப்பு தமக்கு வந்ததாக, வெளிநாட்டமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்துருக்கிறார். இது ஐக்கிய நாட்டு சபையிலும், இலங்கையில் இரட்டை ஆட்சி நிலையிருப்பதான கருத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டுமானால், இரண்டு கட்சியினரும் தமது சொந்த நலனைக் கைவிட்டு, பொது நலனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும. அப்போதே இலங்கையின் இனப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க முடியும். □

---

# தனித்து போட்டியிடுவதற்காக சுதந்திர கட்சி தீவிர பிரசாரம்!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்வரும் தேர்தலில் அமோக வெற்றியைப் பெறும் நோக்கில், தீவிர பிரசாரத்தில் இறங்கியுள்ளது.

ஜே.வி.பி.ஊடாக கூட்டணி அமைக்கும் முயற்சி தோல்வி அடைந்தமையினாலேயே, இந்த முயறசி எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக இன்றுமுதல் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை 'வீட்டுக்கு வீடு' என்னும் பிரசாரத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள், தென்பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடுகளிற்கும் சென்று தமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது தற்போதைய அரசிற்கு எதிரான பிரசாங்கள் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜே.வி.பி உடனான உடன்பாடு முறிவடைந்த பின்னர், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களை போக்குவதற்காகவே இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும், பிரதானமாக கட்சியின் வளர்ச்சியே கருத்தில் கொள்ளப்படுமெனவும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

---

# இராணுவத்தினரை வெளியேறக்கோரி மனிதஉரிமை ஆணைக்குழுவிற்கு மகஜர்

பாஷையூரின் கடற்கரைப் பிரதேசத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கக்கோரி, பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்றுசேர்ந்து கையொப்பமிட்ட கடிதமொன்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட ஏராளமான மக்கள், ஏற்கனவே இவ்வாறு கையொப்பமிட்ட கடிதங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

பாஷையூர் குருநகர், கொழும்புத்துறை ஆகிய இடங்களில் இராணுவம் நிலைகொண்டிருப்பதால், அப்பகுதி மீனவர்கள் மீன்பிடித் தொழிலுக்கு செல்வதற்கு பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

அதேவேளை - அவ்விடங்களிலுள்ள வீடுகளில் மக்கள் மீளச் சென்று குடியேறாதுள்ளமையினால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் வேறிடங்களிலும் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கப் படை விமானம் மீது பக்தாத்தில் ஏவுகணைத் தாக்கு!

பக்தாத் விமானநிலையத்திலிருந்து புறப்பட்ட அமெரிக்கப் படையினரின் விமானமொன்றின் மீது, ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும், விமானம் சேதம் எதுவுமின்றி, மயிரிழையில் தப்பித்துக் கொண்டது.

மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு ஈராக்கிற்குச் சென்றிருந்த அமெரிக்கப் பாகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் - நாடு திரும்புவதற்கு சில மணி நேரத்திற்கு முன் இந்தச் சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஏவுகணையின் தாக்குதிறன் என்னவென்பது - அதனைச் செலுத்தியவர்களுக்குத் தெரியாது என, பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்தனர்.


தரையிலிருந்து 1400 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த விமானத்தின் மீது வெப்ப உணர்திறன் கொண்ட ஏவுகணையால் தாக்குதல் நடத்துவது சாத்தியமற்றது எனவும், பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலக்குத் தவறிய ஏவுகணை - அவ்யா என்ற இடத்தில் விழுந்து வெடித்ததில் - அங்கு நின்ற கார் ஒன்று சேதமடைந்தது.

அவ்யாவில் காவல் கடமையில் நிற்கும் அமெரிக்க இராணுவத்தினரே, கிராமத்தை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாகத் தாம் எண்ணியதாக, அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

### தலிபான் போராளிகளின் தாக்குதல்கள் அதிகரிப்பதைத் தொடர்ந்து

# அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் அடுத்த வாரம் ஆப்கான் விஜயம்!



அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் 'டொனால்ட் ரம்ஸ் பீல்ட்' எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் போராளிகளின் தாக்குதல்கள் அதிகரித்துவருவதையடுத்தே, இவர் ஆப்கானிஸ்தான் செல்லத் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொடரும் தலிபான் போராளிகளின் தாக்குதல்களுக்கு எதிராக - அமெரிக்க, ஆப்கானிஸ்தான் படையினர் போராடி வருகின்றனர். இந்த மோதல்களில் இதுவரை 100 இற்கு மேற்பட்ட தலிபான் போராளிகள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திடீரென அதிகரித்துவரும் தலிபான் போராளிகளின் தாக்குதல் - அவர்கள் ஒன்றிணைந்து தம்மைப் பலப்படுத்தி வருகிறார்களோ என்ற சந்தேகத்தை அமெரிக்கா மத்தியில் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் 'ரம்ஸ்பீல்ட்' முன்னர் ஆப்கானிஸ்தானுக்கு விஜயம்செய்தபோது, ஆப்கானிஸ்தானில் போர் முடிவடைந்துவிட்டதாகவும், இனிமேல் அமெரிக்கா தனது முழுக் கவனத்தையும் ஆப்கானிஸ்தான் புனரமைப்பு, புனர்நிர்மாணத்தில் செலுத்தவுள்ளதாகவும் அறிவித்திருந்தார்.

ஆனால், தற்போது தலிபான் போராளிகள் - மீண்டும் தாம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகப் போராடி வருவதாக அமெரிக்கப்படை அதிகாரியான ரொட்னி டேவிஷ் தெரிவித்தார்.

அடுத்த ஆணடு நடைபெறவுள்ள ஆப்கானிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை பலப்படுத்துவதற்காக, அவருக்கு 1 பில்லியன் டொலரை அடுத்தவாரம் வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

# 50 பிரிட்டிஷ் படையினர் ஈராக் சென்றடைந்தனர்!



ஈராக்கிலுள்ள அமெரிக்க கூட்டுப் படையை வலுப்படுத்துவதற்காக, மேலும் 50 பிரிட்டிஷ் படையினர் பஸ்ரா விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

ஈராக்கின் தென்பகுதியில் அமைந்துள்ள எண்ணெய்க் குழாய்களை பாதுகாப்பது இவர்களின் முக்கிய பணியாகும். மேலும் 3000 படைகளை ஈராக்கிற்கு அனுப்புவது தொடர்பாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு அறிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக் போருக்கு பின் அந்த நாட்டில் பாதுகாப்பு நிலைமையை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அமெரிக்க, பிரிட்டிஷ் படையினர் தவறியமையும், அங்கு நடத்தப்படுகின்ற தாக்குதல்களால் பிரிட்டிஷ் அமெரிக்கப் படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்புகளுமே மேலும் படைகளை அங்கு அனுப்புவது முக்கியமானதென இரு நாடுகளும் கருதியுள்ளன.

சைப்பிரஸில் தற்போது கடமைபுரியும் படையினரின் ஒரு பகுதியிரை, சில மாதங்களில் ஈராக்கில் கடமை புரிய அனுப்புவதற்குப் பிரிட்டன் தீர்மானித்துள்ளது.

### போராளிகளின் தாக்குதல் அச்சுறுத்தல்:

# உஷார் நிலையில் இஸ்ரேல் படைகள்!



பலஸ்தீன போராளி இயக்கமான கமாஸின் ஆன்மீகத் தலைவர்மீது, காஷாவில் கடந்த சனிக்கிழமை இஸ்ரேலியப் படையினர் நடத்திய தாக்குலுக்கு பழிதீர்க்கப்போவதாக கமாஸ் தீவிரவாதிகள் அறிவித்துள்ளதையடுத்து, ஜெருசலேமில் இஸ்ரேலியப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். கூடுதலான பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேல் பிரதேசங்களுக்கு பலஸ்தீனியர்கள் செல்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் ஆன்மீகத் தலைவர் சிறிய காயங்களுக்கு உள்ளாகியிருந்ததுடன் பதினான்கு பேர் காயமடைந்திருந்தனர்.

இதேவேளை -

பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்துடன் தொடர்புகளை வைத்துக்கொள்ள தான் விரும்பவில்லை எனவும், மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதாக இருந்தால் புதிய பிரதம மந்திரிக்கான அலுவலகம் ஒன்று உருவாக்கப்படுதல் அவசியம் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

பலஸ்தீன சட்ட அறிஞர்களுடன் அரபாத் இது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

### 50 ஆண்டுகளின் பின்னர்

# பர்முடாவில் பலத்த புயல்; நால்வரைக் காணவில்லை!



(பர்முடா)

பர்முடா நாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை வீசிய கடும் புயல்காற்றினால், மக்களின் உடைமைகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், நான்கு பேரைக் காணவில்லையெனவும் 2500 வீடுகளின் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 120 மைல் என்ற கணக்கில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 50 ஆண்டு காலப்பகுதியில் அங்கு இதுபோன்ற புயல்காற்று வீசவில்லையெனத் தெரிவிக்கப்படும் அதேவேளை, மண்சரிவு அபாயம் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதால் நூற்றுக் கணக்கான மக்கள் அரசாங்கக் கட்டடங்களில் தஞ்சமடைந்துள்ளனர் என தெரியவருகிறது.

உலகவலம்

### பிரிட்டன் சுரங்க ரயில்களில்

# இரசாயனத் தாக்குதல் நடந்தால் எதிர்கொள்வது குறித்து பயிற்சி!



பிரிட்டனின் சுரங்க ரயில் மீது, தீவிரவாதிகளின் இரசாயனத் தாக்குதல் ஒன்று நடைபெற்றால் எவ்வாறு மாற்று நடவடிக்கைகளை எடுப்பதென பரிட்சீத்துப் பார்ப்பதற்கு அந் நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

இதில் பொதுமக்களோ அல்லது உண்மையான இரசாயனப் பொருட்களோ சம்பந்தப்படுத்தப்படவில்லை. ஒரு இரசாயன தாக்குதல் நடைபெறும்போது - பொலிஸார், தீயணைப்புப் படையினர், அவசரகால வைத்தியப் பணியாளர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை விளக்குவதற்காகவே இந்த பரீட்சீர்ப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரசாயனத் தாக்குதலில் தாக்கப்பட்டவர் போன்றும், எவ்வாறு நச்சுப் பொருட்களை அகற்றும் படையினர் செயறபடுவார்கள் எனவும் பரிட்சித்துப் பார்க்க 60 பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளார்கள். லண்டன் வாட்டலுவில் உள்ள சுரங்க ரயில் நிலையத்தில் இது பரீட்சிக்கப்படவுள்ளது. அந்த ரயில்நிலையத்திற்கு அருகிலுள்ள தெருக்கள் ஞாயிற்றுக்கிழமை மூடப்படவுள்ளது.



## ஊர்சுற்றி எழுதுவது

'தேசிங்குராஜன் குதிரை' என்று எனது பால்ய நண்பன் ஒருவனின் சைக்கிளை எமது நண்பர்கள் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் வர்ணிப்பார்கள். அவ்வளவு வேகமாக நண்பர் அந்தச் சைக்கிளை யாழ்.நகர வீதிகளில் செலுத்திச் செல்வார். அந்த நண்பரை சில தினங்களுக்கு முன்னர் கஸ்தூரியார் வீதியில் எதிர்பாராத வீதமாகச் சந்தித்தேன்.

அவரைப் பார்த்ததும் அவரது 'தேசிங்கு ராஜன்' குதிரைதான் நினைவுக்கு வந்தது. அதைக் கேட்காமல், 'என்ன நடையிலை?' (ஏன் நடந்து வருகிறீர்கள்?) என்று கேட்டேன்.

'இறக்கை இருந்தால் பறந்துபோயிருப்பேன். அது இல்லாததால் நடந்து போகிறேன். சேருமிடத்துக்குப் போய்சேருகிறேனோ, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்சேர்ப்பாங்களோ என்ற சந்தேகத்துடன்தான் போய்க்கொண்டிருக்கிறேன்.' என்று நண்பர் சலிப்புடன் சொன்னார்.

மீண்டும் கதைக்கத் தொடங்குவதற்கு வாயெடுத்தவர், திடீரென்று தனது கையால் என்னை வீதியோரத்துக்குத் தள்ளி இழுத்தார்.

திகைத்துப்போன நான், என்னைச் சுதாகரித்து நிற்பதற்கு முன், வேகமாக வந்த ஒரு மோட்டார் சைக்கிள் எனது கையை இலேசாக உரசிக்கொண்டு சென்றது.

நண்பர் எதுவும் பேசாமல் புன்சிரிப்புடன் என்னை நிமிர்ந்து பார்த்தார். மீண்டும் என்னைத் திரும்பிப் பாரும் என்றார்.

பார்த்தேன். நான்கு இளசுகள் சமாந்தரமாக சைக்கிள்களில் சுவாரஸ்யமாகப் பேசிச் சிரித்தபடியே வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பின்னே வந்த ஒரு இளம்பெண், இவர்களைக் கடந்துசெல்ல முடியாமலோ, அப்படிச் செல்ல விரும்பாமாலோ மெதுவாக வந்து கொண்டிருந்தார். வேறு சில வாகனங்களும் கடந்து செல்லவில்லை. முன்பக்கமாக வந்த மோட்டார் வண்டிகள், அந்த இளசுகளைப் பிரித்துவிடாமல் ஓரமாகச் சென்று கொண்டிருந்தன.

'யாழ்ப்பாண வீதிகளில் இப்போ வாகனங்களும், சைக்கிள் ஓடும் ஆண் பெண் இளசுகளும் போகும் வேகமும் முறைகளையும் பார்த்த பின்னரும் நான் ஏன் நடந்து போகிறேன் என்று கேட்கிறீரே? இதுக்கென்ன பதிலைச் சொல்வது' என்றார்.

யாழ்ப்பாண வீதிகள் இருந்தவை இருந்தபடியே இருக்கின்றன என்றுகூடச் சொல்ல முடியாது. சில இடங்களில் ஒடுங்கியுமிருக்கின்றன.

இந்த வீதிகளின் கடைத்தெருப் பக்கத்தில், கடைக்காரர் தமது விற்பனைப் பொருள்கள் மக்களின் கண்களை உறுத்தவேண்டுமென்பதற்காக கடைவாசல்கள், பக்கவாசல்களிலெல்லாம் அவற்றை முன்பக்கமாகவும், பக்கவாட்டிலும் எப்படியெப்படியெல்லாம் அடுக்கியும் தொங்கவும் வீட்டிருக்கிறார்கள். இப்படிப் பொருளகளை நீட்டி அடுக்கித் தொங்கவிடுவதால் பாதையில் நடந்து செல்வோர், வளைந்து நெளிந்து சில இடங்களில் கடந்து இதேசமயம் பைக்கிள்கள் வந்து மோதிவிடாமல் நின்று சில இடங்களில் பாய்ந்தும், பரத நாட்டியம் ஆடியபடியே போய்ச் சேரவேண்டியிருக்கிறது.

புதிய புதிய வாகனங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து போய்க்கொண்டிருப்பது ஒருபுறமிருக்க, ஜப்பானிலிருந்து அகாஷியும் தகாஷியும்தானா வந்து கொண்டிருக்கிறார்கள். ஜப்பான் நகர வீதிகளில் ஜப்பானிய மங்கையர்கள் ஓடித்திரிந்து களைத்த கழித்த லேடீஸ் சைக்கிள்களும் அவர்கள் இங்கு வருவதற்கு முன்பே இங்கு வந்து காட்சி கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

வாகனங்கள் எல்லாம் பல்வேறு உருவங்களில் வருகின்றன. இதேபோல் பல்வேறு வடிவங்களில் விபத்துக்கள் என்ற வடிவில் இவை தினமும் உயிர்ப்பலி எடுத்துக்கொண்டுதானிருக்கின்றன.

இருக்கும் குறுகலான வீதிகளில் வர்த்தகர்கள் கொஞ்சம் இடத்தை ஆக்கிரமிக்கிறார்களென்றால் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் மேலும் பல பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு பாதசாரிகளுக்குத் தொல்லைக்கு மேல் தொல்லை, வாகனங்களுக்கும்தான்.

இவைமட்டுமல்ல வீடுகளிலுள்ள தேவைக்குதவாத பொருட்கள், தறித்த மரக்கொட்டுகள், குப்பைகள், வாழைக்குலை வெட்டியபின் தாழை மரங்கள், பழைய பொருட்கள் வாங்குவோர் நிராகரித்த தகடுகள், தகரங்கள், போத்தல்கள் எனப் பலவகைக் கழிவுகளும் வீட்டு வாசலுக்குச் சிறிது தூரத்தில் அடுத்த வீட்டுப் படலைக்குச் சற்று எட்டாமல் தவறாமல் கொண்டு வந்து போட்டு விடுகிறார்கள். மாநகரசபையினர் இவற்றை அகற்றுகின்ற மறுநிமிடமே இங்கு குப்பையைக் கொட்டித்தான் குவிக்கின்றனரோ?

வீதிக்கு இரு குடும்பங்கள் அல்லது இருவராவது குறைந்தது மேல்நாடுகளில் இப்பொழுது தஞ்சம் புகுந்து சுத்தமாகவும், சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்களென்பது தயங்காமல் சொல்லலாம்.

அங்கிருந்து கருவாடு, பனாட்டு, ஒடியல், அட்டியல், சங்கிலி செய்தனுப்பும்படி கேட்டுக் கடிதம் எழுதுகிறவர்கள், அங்கு வீட்டு வளவுக்குள் குப்பைகளை வாசலில் வீதியில் கொட்டமுடியாதென்பதையும் அதைப்போல் இங்கேயும் நடந்து கொண்டால் நமது நகருக்கும் மக்களுக்கும் நல்லது என்பது எழுதக்கூடாதா?

மாநகர சபையாரும் இது விடயத்தில் மக்களுக்கு நல்ல வழி காட்டலாம், வெளிநாட்டையல்ல கொழும்பில் சில இடங்களில் பின்பற்றும் சில வழிகளைப் பின்பற்றலாம்.

அது சரி, யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்திலிருந்தபோது வீட்டு வாசல்களிலும் வீதிகளிலும் குப்பைகள் கிடக்கவில்லையே। அது ஏன். எப்படி?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## காவல்துறை நடுவப் பணியக திறப்புவிழா காட்சிகள்







# ஊழல் மலிந்த காவல்துறைகள்...

இறுக்கமான கட்டுப்பாடும் சுய ஒழுக்கமும் எங்களுக்கு எப்போதும் நல்ல பெயரையே தேடித்தரும். எப்போதும் நாங்கள் எங்களுடைய சுய ஒழுக்கத்தைப் பேணவேண்டும். ஒழுக்கங்களில் இரண்டு ஒழுக்கங்கள் இருக்கின்றன. ஒன்று சூழ்நிலையொழுக்கம். மற்றையது சுய ஒழுக்கம். சூழ்நிலை ஒழுக்கம் என்றால் எங்களது சூழலால் ஏற்படுத்தப்படுகின்ற கட்டுப்பாடுகளுக்காக நாங்கள் ஒழுக்கமாக இருப்பது போல் நடிப்பது. சுய ஒழுக்கம் என்றால் எந்த ஒழுங்கற்ற இடத்திலும் நாங்கள் ஒழுங்காக இருப்பது. ஆகவே, எப்போதும் நாங்கள் சுய ஒழுக்கத்தைத் தான் கடைப்பிடிக்கவேண்டும். சுய ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பரை ஒருவராலும் கெடுத்து விடமுடியாது. ஆனால், சூழ்நிலை ஒழுக்கம் அப்படியானதல்ல, இது மற்றவர்களுக்காக நடந்து கொள்வது, அதாவது காவல்துறை என்னும் பொழுது கட்டுப்பாட்டை உங்களுக்கு வகுத்து அந்த பயத்தில் நீங்கள் இருப்பீர்கள். இது சுழ்நிலை ஒழுக்கம். ஆனால், எங்கு சென்றாலும் உங்களுடைய கட்டுப்பாட்டை நீங்கள் கடைப்பிடித்து, உங்களை ஒருவரும் கவனிக்காத இடத்திலும் ஒழுக்கமாக வாழ்வீர்களேயானால் - அதுதான் சுயஒழுக்கம். எனவே, நீங்கள் இந்த ஒழுக்கத்தை கடைப்பிடியுங்கள் இதனால், உங்களுக்கு ஒரு பிரச்சினையும் வராது.

மேலும், உங்களையிட்டு பெருமிதம் அடைகின்றேன். ஏனென்றால் நீங்கள் எவ்வளவோ இக்கட்டான காலகட்டத்திலும் மக்களுடைய அவ்வளவு துன்பங்களையும் சுமந்தவர்கள். அதாவது, காவல்துறை என்னும் பொழுது, உங்களுக்கு எல்லா விதத்திலும் கஷ்டங்கள் இருந்தன. உங்களுக்கு வளங்கள் குறைவாக இருந்தன. உங்களுக்குரிய வாழ்க்கை ரீதியான அதாவது, ஒரு நாட்டினுடைய காவல்துறையைப் போன்ற தனிப்பட்ட வசதிகள் இருக்கவில்லை. இப்படியான ஒரு இறுக்கத்திலும்கூட லஞ்சம்,ஊழல்கள் உலாவுகின்றன. வசதியான சம்பளங்கள் அளிக்கப்படும் பெரிய நாடுகள் காவல்துறைகளிலும்கூட ஊழல்கள் இருக்கின்றன. அப்படிப் பார்க்கும்பொழுது மிக இக்கட்டான காலகட்டங்களிலும் அதாவது எங்களுடைய அமைப்பின் விடுதலைப் போர் நடந்து கொண்டிருக்கின்ற நேரங்களிலும் விடுதலைப் போராட்டத்தின் ஓர் அங்கமாகத்தான் இந்தக் காவல்துறையும் இருக்கின்றது. கிட்டத்தட்ட போராளிகளின் நிலையில் நின்று நீங்கள் உங்களுடைய கடமைகளைச் செய்திருக்கிறீர்கள்.

அத்தோடு உங்களுக்கு இன்னும் ஒன்றையும் கூற விரும்புகிறேன். இந்த மக்களுடன் நீங்கள் பழகும்பொழுது எப்பொழுதும் 'குற்றவாளிகள் பிறப்பதில்லை, குற்றவாளிகள் உருவாக்கப்படுகிறார்கள்' என்பதை மனதில் வைத்திருக்கவேண்டும். எனவே, நீங்கள் யாரையுமே குற்றவாளியாகப் பார்க்கக்கூடாது. அவர்களுடைய அந்தக் குற்றத்திற்கான சூழலைத்தான் - நீங்கள் எப்பொழுதும் ஆராயவேண்டும். அதன்மூலம் அவர்களை எப்படி அந்தக் குற்றச் செயல்களில் இருந்து திருத்தி, எங்களுடைய சமூக வாழ்க்கையில் ஒரு நல்ல பிரஜையாக ஆக்கமுடியும் என்று நீங்கள் பார்க்கவேண்டும். நீங்கள் குற்றவாளியை - குற்றவாளியாகவே தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருந்தால், அவரும் தொடர்ந்தும் குற்றம்செய்பவராகத்தான் மாறுவார்.

சமூகச் சூழல்களால் தான் குற்றவாளிகள் உருவாகிறார்கள். பெற்றோர்களால் சிறுவயதில் கவனிக்காது விடப்பட்டவர்கள் - சிறுவயதிலே சிறுதவறுகளைச் செய்யும் போது அவை கவனிக்கப்பட்டு, திருத்தப்படாமல் அப்படியே விடப்பட்டவர்கள், தனிப்பட்ட முறையில் ஏதோ ஒரு வழியாகப் பாதிக்கப்பட்டவர்கள் போன்றோரால்தான் குற்றச்செயல்கள் உருவாகின்றன. எனவே, நீங்கள் எப்போதும் குற்றவாளிகளை மனிதர்களாக மதித்து நடக்கவேண்டும்.

கண்டிப்பு இருக்கும் அதேநேரம் உங்களிடமிருந்து அன்பும் அவர்களிடம் செலுத்தவேண்டும். அதாவது, எந்தவொரு குற்றவாளியும் குற்றத்தை உடனே ஒத்துக்கொள்ளப் போவதில்லை. அதற்காகவே, பொதுவாகவே காவல்துறையும் சரி, இராணுவமும் சரி எல்லாவற்றிற்குமே கடுமையாக நடந்துகொள்வார்கள். ஆனால் இராணுவத்தைவிடக் காவல்துறை இதுவிடயத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஏனென்றால் காவல்துறையினர் இந்த மக்களை நல்வழிப்படுத்துபவர்களாக இருக்கவேண்டுமேயொழிய, இந்த மக்களில் இருந்து அந்நியப்பட்டவர்களாக இருக்கமுடியாது.

நீங்கள் இந்த மக்களை நெறிப்படுத்துபவர்காளாக இருக்கவேண்டுமே தவிர, இந்த மக்களுக்கும் உங்களுக்கும் ஒரு இடைவெளியும் இருக்கக்கூடாது. எனவே - நீங்கள் எப்பொழுதும் குற்றவாளிகளை அணுகும்போது ஒரு மனிதாபிமானத்துடன் அணுகவேண்டும் என்பது மிகவும் முக்கியமானது.

மனிதர்கள் என்றாலே - அவர்களிடம் பல பலவீனங்கள் இருக்கும். எல்லா மனிதர்களும் ஒழுங்காக இருந்தால் - காவல்துறையே தேவை இல்லை. காவல்துறையை நாங்கள் உருவாக்கவேண்டிய அவசியம் கூட எழுந்திருக்காது. எனவே, நீங்கள் எல்லோரையும் மனிதர்களாகப் பார்க்கவேண்டும்.

காவல்துறையைப் பொறுத்தவரைக்கும் - உங்களுடைய மனங்களிலும் வேலையின் அழுத்தம் நிறைந்திருக்கும். அதாவது, உங்களுடைய வேலைகள் எப்பொழுதும் அளவுக்கு மீறியவை. ஏனென்றால், இன்றைக்குக்கூட காவல்துறைக்கு ஆளணித்தேவை நிறையவே உள்ளது. அப்படி இருக்கும்போது உங்களுடைய வேலைகளில் சில அழுத்தங்கள் ஏற்படும்.

நீங்களும், உங்களுடைய மனமும் களைத்திருக்கின்ற நேரம் உங்களுக்குக்கூட கோபங்கள், எரிச்சல்கள் போன்றவை உருவாகும். ஆனாலும் மிகவும் பொறுமையாக மக்களைக்கையாளும் தன்மை உங்களுக்கு வரவேண்டும். அதாவது, உங்களது சகிப்புத்தன்மை மிகவும் உச்சநிலையில் இருந்தால்தான், நீங்கள் ஒரு அழுத்தமான நேரத்தில் மக்களுடன் பழகுவதிலும் சரி, காரியங்களை ஆற்றுவதிலும் சரி உறுதியாகச் செயற்படமுடியும். இந்தச் சகிப்புத்தன்மை இல்லாதவர்களினால்தான் பிரச்சினைகளே வருகின்றன.

அத்தோடு, இன்னுமொரு விடயத்தையும் நீங்கள் எப்பொழுதும் மனதில் கொள்ளவேண்டும். அதிகாரம் எமது கைகளில் வரும்பொழுது எல்லாவற்றையும் அதிகாரத்தால் செய்துவிட முடியும் என்ற மனஉணர்வை அது உருவாக்கும். அந்தத் தன்மையை நீங்கள் குறைத்துக்கொள்ள வேண்டும். எவ்வளவுதான் அதிகாரம் இருந்தாலும் நீங்கள் எவ்வளவிற்கெவ்வெளவு மக்களிடம் அன்பாக இருக்கிறீர்களோ - அவ்வளவிற்கவ்வளவு மக்கள் உங்களுடனும் இணைந்து நெருங்கிப் பழகுவார்கள்.

உங்களுடைய சீருடை சிறிலங்கா காவல்துறையினுடைய சீருடையை விட வித்தியாசமானது. சிறிலங்கா அரசாங்கத்தினது சீருடை - காக்கி நிறம். உங்களுடைய சீருடை மெல்லிய இளநீல நிறம். நான் இந்த நிறத்தைத் தெரிவுசெய்வதற்குக் கூடக் காரணம் இருக்கிறது.

காலம்காலமாக எங்களுடைய மக்களிடம் பொலிஸ் என்றால் ஒரு பயம், காக்கி உடுப்பு என்றால் ஒரு பயம் என்ற நிலைமை இருந்தது. அதாவது அடக்குமுறை இராணுவத்தையும், அடக்குமுறை புரிகின்ற காவல்துறையையும் பார்த்ததால் ஏற்பட்டதோர் விளைவு இது.

எனவே, நாங்களும் இந்த உணர்வைப் பிரதிபலிக்கக்கூடாது என்பதற்காகத்தான் - இந்தச் சீருடையை உங்களுக்குத் தெரிவுசெய்தேன்.

அதாவது, சிறிலங்கா காவல்துறையைப் பார்த்துப்பார்த்து பழகிய மக்களுக்கு - அவர்களில் இருந்த அந்த வெறுப்பு, நீங்களும் அதே மாதிரிச் சீருடை தரித்தால் உங்களிடமும் வரும். மக்களின் மனங்களில் உள்ள அப்படியான அச்ச உணர்வுகளை நீங்கள் தான் மாற்றவேண்டும். அதனை நீக்கவேண்டிய கடமையும் உங்களுடையதே.

நீங்கள் இவ்வளவு காலமும் எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் மிகுந்த பொறுப்புணர்வோடும், கடமையுணர்வோடும் - இந்தப் பணியைச் செய்துவருகிறீர்கள்.

இப்பொழுது இருக்கின்ற காலம் மிகவும் வித்தியாசமானது. ஏ-9 பாதை திறக்கப்பட்டிருக்கிறது. தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் நிறையப் பேர் வந்துகொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டவர்கள் நிறையப் பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். எங்களது மக்களைப் பொறுத்தவரையில்- அவர்கள் இதைத் தங்களுடைய நாடு என்று கருதிக் கொண்டு வருகிறார்கள். இந்நிலையில் - உங்களுடைய செயல்தான் அவர்களுக்கும் - எங்களுடைய போராட்டத்தின் மீதும், எங்களுடைய காவல்துறையின் மீதும் நம்பிக்கையை உருவாக்கும்.

எனவே, இந்தக் காலகட்டத்தில் நீங்கள் மிகவும் அவதானமாகவும், முன்னரைவிட மிகவும் சிறப்பாகவும் செயற்படவேண்டும். இதுவரை காலமும் எத்தனையோ நெருக்கடிகளுக்கும் அழுத்தங்களுக்கும் மத்தியில் உங்கள் பணிகளை ஆற்றினீர்கள். ஆனால், இப்பொழுது அப்படியல்ல, இப்பொழுது நிறைய வசதிகளும் வாய்ப்புக்களும் ஏற்பட்டுவருகின்றன. அப்படியிருக்கும் போது என்னதான் நடந்தாலும் நீங்கள் அந்தப் பழைய இக்கட்டான காலங்களில் எப்படிக் கட்டுக்கோப்புடன் மக்களோடு ஓர் உறவை வளர்த்துக் கொண்டு செயற்பட்டீர்களோ அது போன்று, நடுவப்பணியகம் போன்ற கட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு மேலும் அதிகாரம் கைக்குச் சேரும் போதும், அந்த அதிகாரம் எனும் தலைப்பாரத்தை உங்களிடம் வர விடாமல் அன்பு என்ற ஆயுதத்தால் அதனை விரட்டி, மக்களுடன் உங்களுடைய உறவுகளை இன்னும் நெருக்கமாக வளர்த்துக்கொண்டு உங்கள் கடமைகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## மீளக்குடியேறிய...

தற்கு அச்சமடைந்துள்ளனர்.

இதேவேளை அந்தக் கிராமங்களின் மயானங்களை பயன்படுத்துவதற்கும், இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன், தமக்கு அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை எனவும், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட எந்தவித வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர்.

# எரிகாயங்களுக்குள்ளான பெண் வைத்தியசாலையில் உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

தீயில் எரியுண்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் குடும்பப்பெண், சிகிச்சை பலனளிக்காத நிலையில்- நேற்றையதினம் மரணமடைந்தார்.

சுதந்திரபுரம் அச்சுவேலியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் இரத்தினேஸ்வரி (வயது 34) எனும் பெண்ணே மரணமானவராவார்.

கடந்த இரண்டாம் திகதி மேற்படி பெண் வீட்டில் அடுப்பைப் பற்றவைக்க மண்ணெண்ணெயை ஊற்றி எரிக்க முற்பட்டபோதே, தவறுதலாக உடலில் தீப்பற்றி நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு அங்கு சிகிச்சையளிக்கப்பட்ட போதும், சிகிச்சை பலனளிக்காது நேற்றுக்காலை மரணமானார்.

மரண விசாரணையின் பின், சடலம் கணவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ரா,111)

# அனுமதியின்றி அரசாங்க ஊழியர்களை ஓய்வூதியத் திட்டத்தில் சேர்க்கக் கூடாது

## திறைசேரியின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

திறைசேரி செயலாளரின் அனுமதியின்றி, அரசாங்க மற்றும் மாகாணசபைகளில் கடமையாற்றும் எவரையும் - புதிய ஓய்வூதிய முறையில் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்று, நிதிஅமைச்சின் செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தர விட்டுள்ளார்.

2003 ஆம் ஜனவரிக்குப் பின்னர், அரசாங்க மற்றும் மாகாணசபைகளின் கீழ் - நிரந்தர அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்களுக்கு, புதிய ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களின் நியமனங்கள், திறைசேரி செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (01)

# தலைவர் பிரபாகரன்...

இதனை அடுத்து தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி பொட்டு அம்மான் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தமிழீழ காவல்துறைக் கொடியினை காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியத் தலைவரை காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தளபதிகள் துறைப்பொறுப்பாளர்கள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்களும், போராளிகளும் செங்கம்பள வரவேற்புடன் காவல்துறை சிறப்பு அணிவகுப்பு நெறியாள்கையுடன் நிகழ்வு நடைபெறும் இடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இதனையடுத்து, தமிழீழ காவல்துறை நடுவப் பணியகத்தினை - காலை 6.40 மணிக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நடாவை வெட்டித் திறந்துவைத்து, பணிமனையைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட மண்டபத்தில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அங்கு தமிழீழத் தேசியத் தலைவர் சிறப்புரையாற்றினார்.

# விபத்தில் ஒருவர்காயம

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் காயமடைந்த ஒருவர், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 7.50 மணியளவில் நடைபெற்ற இந்த விபத்தில், வண்ணார்பண்ணை - ஓடை ஒழுங்கையைச் சேர்ந்த அரியகுட்டி விஸ்வலிங்கம் (வயது 52) என்பவரே காயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் கல்வியியல் கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்தவருக்கு, பின்னால் வந்த கார் மோதியதாலேயே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.